Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
THINAMURASU
தினப்பதிப்பு

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 08 புதன்கிழமை (22.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 234

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2486)
















# தடைகளையும் தாண்டி மனிதாபிமான உதவிகள்

## ஐரோப்பிய ஒன்றியம் முடிவு




(ஜெனிவா)

உள்நாட்டு யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட இலங்கைக்கான மனிதாபிமான உதவிகளை தடையின்றித் தொடர்ந்து வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருக்கிறது. இலங்கையில் மனித உரிமைகள் முறையாக பேணப்படுவதில்லை என்ற குற்றச் சாட்டுக்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகள் இலங்கை அரசு மீது முன்வைத்த போதிலும் மனிதாபிமான உதவிகளைத் தொடருவது என்ற முடிவை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ளது.

கடந்த ஆண்டைப் போன்றே இந்த ஆண்டும் தொடர்ச்சியாக நிதி உதவிகள் வழங்கப்பட உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பெர்னாட் செவாஜ் தெரிவித்துள்ளார். 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இலங்கைக்கு 587 மில்லியன் யூரோ நிதி உதவிகளை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது. மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளது. அதேவேளை இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு சிறந்த சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தொழிற்சங்கப் போர் தோல்வி; கோரிக்கைக்கு மசியவில்லை அரசு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பை அகற்றுமாறு கோரி நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை நேற்று நடாத்துவதற்கு 700 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்திருந்தன.


அதற்கான ஏற்பாடுகளில் மேற்படி தொழிற்சங்கங்களுடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவை உட்பட மேலும் சில அரசியல் கட்சிகள் களம் குதித்தன.

எனினும் இந்த தொழிற்சங்கப் போராட்டம் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. இதனால் போராட்டம் பிசுபிசுத்துப்போய்விட்டது. கொழும்பு புறநகரம் உட்பட நாட்டின் பிரதான நகரங்களில் நாளாந்த செயற்பாடுகள் அனைத்தும் தடையின்றித் தொடர்ந்தன. அனைத்து அலுவலகங்களும் விறுவிறுப்புடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை

### உண்மையை கக்குகிறார் தூதுவர்



(கொழும்பு)

தமிழர்களின் அரசியல் உரிமைக்கான பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக இந்திய அரசு இதுவரை எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் புலிகள் அனைவருக்கும் விடுதலை

புனர்வாழ்வு பெற்றுவருகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் எஞ்சியுள்ள 340 முன்னாள் போராளிகளையும் இந்த வருட இறுதிக்குள் சமூகமயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிடுகின்றது. சமூகமயப்படுத்தல் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக, வவுனியா மருதமடுவில் இயங்கிவந்த புனர்வாழ்வு முகாம் ஓரிரு தினங்களுக்கு முன்னர் மூடப்பட்டதாக அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆவது திருத்தத்தை அகற்ற அமைச்சர் சம்பிக்க பிரேரணை

13 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைப் முறையை இரத்து செய்யுமாறு கோரி நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக ஹெல உறுமய கட்சியின் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். குறித்த பிரேரணை இந்த வாரம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்டமும் மாகாண சபை முறையும் நாடாளுமன்ற முறைக்கு மாறானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவில் மாநிலம் ஒன்று அதிகாரத்தை மீறி செயற்பட்டால் அம்மாநிலத்தின் அதிகாரத்தை மத்திய அரசு பொறுப்



பேற்க முடியும். இந்தியாவில் சமூக நீதி பட்டியல் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கின்ற போதும் இலங்கையில் அந்த அதிகாரம் மாகாண சபைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்திலும் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களினால் மின்கட்டண உயர்விற்கு கண்டனம் தெரிவித்து யாழ் பல்கலைக் கழகத்தில் ஒரு மணிநேர அமைதி வழியிலான ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தமது ஆதரவினைத் தெரிவித்ததுடன் நாடு தழுவிய

19 ஆம் பக்கம் பார்க்க

## அகற்ற முடியாது 13 ஆவது திருத்தத்தை



அரசியல் அமைப்பில் காணபபடுகின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் தார்மீக அதிகாரம் அரசாங்கத்திற்கோ அதனைச் சார்ந்த பங்காளிக் கட்சிகளுக்கோ கிடையாது. அவ்வாறானதொரு நடவடிக்கை எத்தரப்பில் முன்னெடுக்கப்பட்டாலும் அதனை தோல்வியடையச் செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என்று

19 ஆம் பக்கம் பூர்க்க


உள்ளே...
தரம் – 5
புலமைப்பரிசில்
மாதிரி வினாத்
தாள்

## முஸ்லிம்கள் மீது மத ஒடுக்குமுறை இலங்கையில் இப்போது உச்சக்கட்டம் இது அமெரிக்காவின் கவலை

இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தினர் மீது திட்டமிட்ட வகையில் மத ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமெரிக்கா கவலை வெளியிட்டிருக்கிறது. முஸ்லிம் மக்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை ஒன்றில்

19 ஆம் பக்கம் பார்க்க





புலோலி ப.நோ.கூ.சங்க சாதனை மாணவர்கள் கௌரவிப்பு விழாவை யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், சங்க இயக்குநர் சபைத் தலைவர் ஆர்.பூரணச்சந்திரன் விழாவுக்கு தலைமை தாங்கி உரையாற்றுவதையும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் எஸ்.பத்மநாதஐயர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், சங்க இயக்குநர் சபை உபதலைவர் எம்.ஜெயதேவன் சாதனை மாணவியொருவருக்கு பதக்கம் வழங்கி கௌரவிப்பதையும் காணலாம். (01)

# முழுமைபெற்ற சமூகமாக மாற கல்வியே எமது உயிர்மூச்சு



கல்வி எமது சமூகத்தின் உயிர்மூச்சு இதில் நாம் முழுமைபெற்ற சமூகமாக மாறுகின்ற சந்தர்ப்பத்தில் எமது சமூகம் அனைத்து வகையான மேம்பாட்டையும் எட்டிய சமூகமாக மாற்றமடையும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி பளையில் நடைபெற்ற சக்திகல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று நாம் கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமாக மாறியிருக்கின்றோம். கடந்தகால யுத்தம் எமது சமூகத்தின் கல்வித்துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதும் அதற்கு பின்னர் உருவாகியிருக்கும் சூழல் கல்வித்துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

கிடைத்திருக்கும் அந்தவாய்ப்பை அனைவரும் சரியாகப் பயன்படுத்திக்கொண்டதன் அடிப்படையில் இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறை மிக விரைவான வளர்ச்சிப்போக்கை எட்டிவருகின்றது.

அத்தோடு எதிர்காலத்தில் இம்மாவட்டத்தின் கல்வித் துறையை மேலும் மேம்பாடடையச் செய்வதற்கான நடவடிக்கைகளில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இதனிடையே இன்றுள்ள மாணவர்களின் கைகளிலேயே எமது சமூகத்தின் எதிர்காலமே தங்கியிருக்கின்றது என்ற யதார்த்தத்தை மாணவர்கள் நன்கு உணர்ந்து செயற்படவேண்டும்.

கல்விநிலைய வளாகத்தில் கல்விநிலையத்தின் இயக்குனர் சாந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேசசபையின் உறுப்பினர்களான அன்ரன், அன்பழகன் மற்றும் தியாகராஜா ஆகியோரும் பிரதேசசபையின் செயலாளர் சிவப்பிரகாசம், பளை மத்திய கல்லூரியின் முதல்வர் பாலகிருஸ்ணன், வேம்பொடுகேணி அ.த.க பாடசாலை முதல்வர் சன்முகதாஸ், பச்சிலைப்பள்ளியின் சமூகசேவையாளர் தர்மலிங்கம், பச்சிலைப்பள்ளி சந்தை வர்த்தக சங்கத்தலைவர் குலேந்திரராசா ஆகியோரும் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# மிடுக்குடன் எழுகிறது கந்தசுவாமி ஆலய இராஜகோபுரம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி நகர மையத்தில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலயத்தின் இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த இந்த ஆலயம் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து செயலிழந்திருந்தது. ஏ-9 பிரதான வீதியின் கிளிநொச்சி நகரத்தின் மிகப்பழமையான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

பிரபல வர்த்தகர்கள் பிரபல விவசாயிகள் மற்றும் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் வணக்கத்துக்குரிய ஆலயமாக இந்த ஆலயம் திகழ்கின்றது. தற்பொழுது பெருமளவு நிதிச் செலவில் இந்த இராஜ கோபுரம் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றது.

ஏ-9 வீதி அகலமாக்கப்பட்டு இப்பகுதியில் இரு வழிப்பாதையாக்கப்பட்ட நிலையில் இந்த இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்ததும் இப்பகுதி புது மெருகுடன் காட்சியளிக்கும்.

இதேவேளை அன்னதான மடம் புனரமைப்புப் பணி[illegible]ம் இடம்பெற்று வருகின்றது. (21)

## கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த சங்காபிஷேகமும் பாற்குட பவனியும் நாளை நடைபெறவுள்ளது.

அல்வாய் குமிழடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு பாற்குடபவனி இடம்பெறும். 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும். மாலை திருவூஞ்சல், மணவாளக் கோலம் என்பன இடம்பெற்று அம்பாள் வீதியுலாவருவார். ([illegible]01)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 957

திகதி 20.05.2013

வெற்றி எண்கள்: 05 07 09 20 — ஆங்கில எழுத்து: R

ஜக்பொட் பரிசு ரூ. 12,053,640/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 12,053,640/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 1,000,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6 | 50,000/= | ரூ. 300,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 236 | 1,000/= | ரூ. 236,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 427 | 1,000/= | ரூ. 427,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 10877 | 60/= | ரூ. 652,620/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5730 | 40/= | ரூ. 229,200/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 141634 | 20/= | ரூ. 2,832,680/= |
| ஆங்கில எழுத்து | 20505 | 20/= | ரூ. 410,100/= |
| | | மொத்தம் ரூ. | 6,087,600/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருக்கோணமலை | 604164040-6-16 |
| கம்பஹா | 604172776-6-16 |
| இரத்தினபுரி | 604176800-8-28 |
| குருநாகல் | 604160506-4-04 |
| காலி | 604167548-4-24 |
| பதுளை | 604169497-3-23 |
| அநுராதபுரம் | 604175395-8-28 |
| மட்டக்களப்பு | 604176255-0-10 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,487,600/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 1,23,31,060/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.23 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/2531)


# தீவக அபிவிருத்தி நிறுவனம் மீண்டும் புத்துயிர் பெறுமா?

(வேலணை)

தீவகப் பகுதிகளினது அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னரான 1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்துள்ள தீவக அபிவிருத்தி நிறுவனமானது தீவகப் பகுதிகளில் இடம்பெற்றிருந்த அசாதாரண சூழ்நிலையில் தொடர்ந்தும் இயங்காமல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறான தீவக அபிவிருத்தி நிறுவனமானது தற்போதைய சமாதான சூழ்நிலையில் மீண்டும் இயங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தீவகத்தின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம், கடற்றொழில், விவசாயம், போக்குவரத்து மற்றும் சமூக முன்னேற்ற செயற்பாடுகளையும் தீவகத்தின் கிடைக்கக்கூடிய மூலவளங்களை எடுத்து ஒவ்வொரு மூலவளங்களையும் தற்கால தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ற விதங்களில் பொருட்களை வடிவமைத்து சந்தைப்படுத்தல், தீவகத்தில் தொழில்வாய்ப்புக்களின்றி இருந்து வருகின்றவர்களுக்கான தொழில்வாய்ப்புக்களையும் கொடுப்பதுடன் அவர்களது குடும்ப வருமானங்களை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் இந்த நிறுவனம் செயற்படுத்த முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவகத்தை மையமாகக் கொண்டுள்ள நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய முறையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தில் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இதற்கான நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டு அங்கம் வகித்து வருகின்றனர்.

தீவகத்தைச் சேர்ந்த பல்துறை சார்ந்த அறிஞர்கள், கல்வியாளர்கள், வர்த்தகர்கள், அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நிறுவனத்தினை முன்னிலைப்படுத்துவதற்கும் தீவகத்தின் அதி உன்னதமான வளர்ச்சிக்குமாக இந்நிறுவனம் செயற்படவிருப்பதாக அதன் அமைப்பாளர்களில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளார். (05)

## மணவாளக்கோல பெருவிழா

அச்சுவேலி இடைக்காடு ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் ஆலய அஷ்டோத்திரசத (108) கலச சங்காபிஷேக மணவாளக் கோல பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை பிரதம குரு சிவஸ்ரீ கந்தஜெயராம சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த சங்காபிஷேக பெருவிழாவில் நாளைமறுதினம் மாலை 5.00 மணி முதல் விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாகனம், சாந்திவழிபாடுகள், கும்ப சங்கு ஸ்தாபனம், யாகபூசை வழிபாடுகள் என்பன இடம்பெறும். (85)

# யாழ்.செஞ்சிலுவைச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் யாழ்.அகவெளி மண்டபத்தில் முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெற்றன.

புதிய நிர்வாக உத்தியோகஸ்தர்களில் தலைவராக பூ.பாலகிருஷ்ணன், செயலாளராக க.மகாலிங்கம், பிரதித்தலைவராக த.ரவிச்சந்திரன், பொருளாளராக எ.அருந்தவச்சீலன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக 6 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் பூ.பாலகிருஷ்ணன் உரையாற்றும்போது கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடியினால் சிறந்தசேவையாற்ற முடியாத நிலை ஏற்பட்டன. இவ்வருடம் புதிய நிர்வாகத்தின் கீழ் சிறப்பான சேவைகள் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென கூறினார். (105)

# வடமராட்சியில் மீண்டும் ஒளிரும் செயலிழந்த தெருமின் விளக்குகள்


உயர் மின் அழுத்தம் காரணமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நீண்டகாலமாக ஒளிராது செயலிழந்திருந்த தெருமின்விளக்குகள் மீண்டும் ஒளிரத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு இப்பிரதேசத்திற்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மருதங்கேணி சந்தியில் இருந்து தாளையடி சுனாமி குடியிருப்புத்திட்ட வீதிகளில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனின் ஒதுக்கீட்டில் தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிரவிடப்பட்டிருந்தன.

திடீரென ஏற்பட்ட உயர்மின் அழுத்தம் காரணமாக அனைத்து மின் விளக்குகளும் செயல் இழந்தன. பருத்தித்துறை பிரதேசசபையினரிடம் பல முறை அப்பகுதி பொது அமைப்புக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தும் நடவடிக்கைகள் கடந்த ஒன்பது மாதங்களாக எடுக்கப்படவில்லை.

இதனையடுத்து பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தனது சொந்தப்பணத்தில் மின்தடக்கிகளை கொள்முதல் செய்து புதிய மின் குமிழ்களை இணைத்து தெரு மின் விளக்குகளை ஒளிரச் செய்துள்ளார். இதன் மூலம் இதுவரை காலமும் இரவு வேளைகளில் பல சிரமங்களை எதிர்கொண்ட இப்பகுதி மக்கள் தற்போது இரவு நேரங்களில் போக்குவரத்தினை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதுடன், பல சிரமங்களில் இருந்து விடுபட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனின் மேலதிக ஒதுக்கீட்டில் மாமுனை, செம்



பியன்பற்று, வடக்கு பிலிப்பு நேரியார் தேவாலயச் சுற்றாடல் பகுதிக்கு புதிதாக மேலும் 08 தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிரவிடப்பட்டுள்ளன.

# குப்பை கூழங்கள் வழியும் மானிப்பாய் மெமோறியல் வீதி

மானிப்பாய் ஊடக சங்குவேலிக்குச் செல்லும் மெமேறியல் வீதியின் ஓரங்களில் குப்பைகூழங்களை மக்கள் போட்டு விடுவதால் போக்குவரவில் அசௌகரியம் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அருகே எலிம்ஹவுஸ் சிறுவர் விடுதி மற்றும் கல்விச் சாலை, ஆராதனை மண்டபம் என்பனவும் வீதியோர வைரவர் சிற்றாலயங்களும் அமைந்துள்ள தூய்மை பேண வேண்டிய இடங்களில் வீடுகளால் அப்புறப்படுத்தும் குப்பை கூழங்களைப்போட்டு அசிங்கப்படுத்தல் நிகழ்வதாக விசனம் கூறப்படுகிறது.

காணி வசதி, வளவு விஸ்தீரணம் உள்ள மேற்படி இடங்களில் குப்பைகளை வெட்டிப் புதைக்கவோ, தீ மூட்டி எரிக்கவோ முடியாமல நகரப்பகுதிகளைப் போன்று வீதிகளில் போட்டு விடுவதால் குப்பை கூழங்கள் கிடந்து போக்கு வரவுக்கு அசௌகரியத்தை உருவாக்குகிறது.

அப்பகுதியில் குப்பைகளை எடுக்கும் வாகனங்கள் வருவதுமில்லை, அதனால் நீண்ட நாட்களுக்கு கழிவுப்பொருட்கள் கிடந்து வீதிகளில் சிதறி சூழலை மாசுபடுத்தும் விதமாகவும் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (68)



வற்றாப்பளை ஆலய விசாகப் பொங்கல் விழாவுக்காக முள்ளியவளை கட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து திருவிளக்கு ஏற்றுவதற்காக கடல்நீர் எடுப்பதற்காக முள்ளியவளை கடற்கரைக்குச் சென்று திருக்குடத்தில் நீர் ஏந்தி வருவதைக் காணலாம். (125)


# ஊரெழு கலை மன்றத்தின் கலை கலாசார விழா

உரும்பிராய் ஊரெழு கலை கலாசார மன்றத்தின் கலை கலாசார விழா கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கற்பக விநாயகர் கலை அரங்கில் சிறப்புற நடைபெற்றது.

ஓய்வுபெற்ற அதிபர் கவிமணி அன்னைதாசன் ஆனந்தராசாவின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், கோப்பாய் கோட்டக்கல்விப் 'பணிப்பாளர் லே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபர் அருள்நந்தசிவம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். (120)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம்



(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2013 விஜய வருட மஹோற்சவம் இடம்பெறவுள்ளது.

வைகாசி 26 ஆம் நாள் 08.06.2013 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் அம்பாளின் மஹோற்சவம் ஆரம்பமாகி 24.06.2013 திங்கட்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் நிறைவுறும் இலங்கையிற் கடல் சூழ்ந்த யாத்திரைத் தலமாகிய நயினையில் அழகொழுக வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பெருவிழாக் காண வருமாறு ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

09.06.2013 ஞாயிற்றுக்கிழமை 01ஆம் திருவிழா பகல் கொடியேற்றம் 12.00 மணிக்கும், 13.06.2013 வியாழக்கிழமை 05 ஆம் திருவிழா இரவு முத்துச்சப்பறமும், 15.06.2013 சனிக்கிழமை, 07 ஆம் திருவிழா இரவு கைலைக்காட்சியும், 17.06.2013 திங்கட்கிழமை 09.ஆம் திருவிழா பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், 18.06.2013 செவ்வாய்க்கிழமை 10 ஆம் திருவிழா பகல் சிவ பூசைக் கைலைக்காட்சியும், 10 ஆம் திருவிழா இரவு திருமஞ்சமும், 19.06.2013 புதன் கிழமை 11 ஆம் திருவிழா பகல் விசேட கருட சர்ப்ப பூசை வாயு பட்சணி நாசம் வீதியுலாவும், இரவு பூந்தண்டிகையும், 20.06.2013 வியாழக் கிழமை 12 ஆம் திருவிழா குதிரை வாகனமும், 21.06.2013 வெள்ளிக்கிழமை 13 ஆம் திருவிழா பகல் கைலைக்காட்சியும், இரவு சப்பறமும், 22.06.2013 சனிக்கிழமை 14 ஆம் திருவிழா பகல் தேர்காலையும், 23.06.2013 ஞாயிற்றுக்கிழமை 15 ஆம் திருவிழா காலை தீர்த்தமும், 15 ஆம் திருவிழா மாலை திருவூஞ்சல், கொடியிறக்கமும், 24.06.2013 திங்கட்கிழமை 16 ஆம் திருவிழா இரவு (பூங்காவனம்) தெப்போற்சவமும் இடம்பெறவுள்ளன.

யாத்திரீர்களின் நலன்கருதி, வழமைபோல் இம்முறையும் போக்குவரத்துச் சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், அமுதசுரபி அன்னதாதன சபையினர், தாகசாந்தி நிலையத்தினர், சுகாதார சேவைப் பகுதியினர், தொண்டர் சபையினர், சாரணர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர், மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இப் பெருவிழாச் சிறப்புடன் செய்து முடிப்பதற்கு திருவிழா உபயகாரர்களும், அடியார்களும் எமக்கு பூரண ஒத்துழைப்புத் தந்துதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். என ஆலய அறங்காவல் சபையினர் அறிவித்துள்ளனர். (21)



பருத்தித்துறை நகரை அண்டிய ஆட்கள் நடமாட்டமுள்ள பகுதியில் பற்றைகள் நிறைந்த பாழடைந்த வீட்டில் நிலத்தில் வானமே கூரையாகக் கொண்டு அநாதரவான நிலையில் அம்மா ஒருவர் தன்னிச்சையாக சமைத்து உண்பதைக் காணலாம். (116)

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பார், உலகம் பரந்து கிடக்கிறது!

இன்றைய வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் நமது கல்விமுறையில் மாற்றங்கள் வேண்டியிருக்கிறது என்பதை பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். உண்ணும் உணவை நஞ்சாக்காதவாறு மண்ணை மலடாக்காதவாறு நம் விவசாய முறையில் மாற்றங்கள் வேண்டியிருக்கிறது. நம் நுகர்வுமுறையில், உணவுப்பழக்கத்தில், சகமனிதர்களுடனான உறவைப் பேணுவதில் எல்லாம் 'இன்று'க்கேற்றவாறு நாம் மாற்றங்களைக் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நம் சிந்தனை முறைகளில் மாற்றம் வரவேண்டியிருக்கிறது. இனரீதியாக, மதரீதியாக, சாதிரீதியாக, பால்ரீதியாக, பிரதேசரீதியாக, மரபுரீதியாக, பொருளாதார ரீதியாக எல்லாம் நமக்குள்ளும் இருந்து கொண்டிருக்கும் – பிறரை ஒடுக்கும் அந்த உணர்வுகளை கண்டறிந்து விலக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அடுத்தவனைத் தனக்குச் சமமாக எடுக்காத மனிதன், எப்படி தன்னை இன்றைய உலகைச் சேர்ந்த மனிதனாகச் சொல்லிக்கொள்ள முடியும்?

நம் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் நம் சிந்தனை முறைகளில் மாற்றம் வேண்டும். நம் அடிப்படை மனோபாவமே மாறவேண்டியிருக்கிறது. என்ன வழி? எங்கிருந்து தொடங்குவது? உபதேசங்களாலும் அறிவுரைகளாலும் மனிதர்களைத் திருத்திவிடலாம் என்று நம்பலாமா?

இதற்கு முற்றுமுழுதாக 'ஆம்' என்று பதில் சொல்ல முடியவில்லை. நல்லுரைகளால் மனிதன் திருந்திவிடுவானென்றால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றி சொல்லப்பட்டுவரும் திருக்குறள் போன்ற நல்வழி காட்டும் நூல்களால் இந்த உலகம் திருந்தியிருக்க வேண்டுமே என்னும் வாதத்தை புறக்கணிக்க முடியவில்லை.

மறுபுறம், ஒருவனது குணங்களில் உண்டாகக்கூடிய மாறுதல்களுக்கும், அவனது ஆளுமை உருவாக்கத்திற்கும் – அவன் எத்தகைய கருத்துக்களைக் கேட்டு வளர்கிறான் என்பது காரணமாயிருந்திருக்கிறது என்பதற்கு வரலாற்று உதாரணங்கள் உண்டு.

துறவிகள் புலவர்கள் மூலம் போர் எண்ணத்தை முற்றாகக் கைவிட்ட மன்னர்கள் வரலாற்றை அறிகிறோம்; அரிச்சந்திரன் கதை கேட்டு தன் வாழ்வை சத்தியசோதனை ஆக்கிக்கொண்ட காந்தியின் கதை அறிகிறோம்; மராட்டிய மன்னன் ஒருவன் தாயிடம் கேட்ட கதைகளினால் வீர சிவாஜியாகப் புகழ்பெற்றான் என்று பார்க்கிறோம்; கல்கத்தா மகாநாட்டுக்குச் சென்றுவரும் வழியில் நிவேதிதா அம்மையாருடன் உரையாடித் திரும்பிய பிறகு, தான் அடியோடு மாற்றமடைந்ததாக பாரதி குறிப்பிடுகிறான்.

"கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்" என்று மாவோ சொன்னதும் செய்துகாட்டியதும் இதைத்தான். நல்ல எண்ணங்கள், கருத்துக்களைக் கேட்டு வளரக்கூடிய சூழலை உருவாக்கித் தருவது அவர்கள் நல்லவர்களாய் வல்லவர்களாய் வளரும் வாய்ப்புகளை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. முதலில் "முடியும்" என்று நம்ப வேண்டும். பிரபலமான ஒரு குட்டிக் கதை.

கடல் அருகே பெரிய காடு. அங்கே பெரிய மரம் ஒன்று. அதில் ஒரு கிளியும், அதன் குஞ்சும். குஞ்சுக்குத் தாய்க் கிளி சொல்லியது: "கண்ணே, போ, போய்ப் பறந்து பார்!" குஞ்சுக்குப் பயம். அது தாயின் சிறகோடு ஒட்டிக்கொண்டது. தைரியம் சொல்லியது தாய்க்கிளி. "ஊஹூம்" குஞ்சு தாயை இறுகக் கட்டிக்கொண்டது. அது எதிர்பாராத தருணத்தில் கிளி, மரத்திலிருந்து கீழே தள்ளியது. ஒரு பந்து போல மரத்திலிருந்து கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தது குஞ்சு. வேறுவழியின்றித் தன் சிறகுகளை அடிக்கத் தொடங்கிற்று. என்ன ஆனந்தம்! மிதக்க ஆரம்பித்தது. கடல் மீதும் காட்டின் மீதும் அது வட்டமிட்டது. அதன்பின் மேலே உயர்ந்து வான வெளியில் பறக்கத் தொடங்கிற்று.

"நம்மால் முடியாது" என்று தயங்கிக்கொண்டிருக்கும் வரை, நமக்கு உலகமும் சுருங்கி, நம் திறமைகளும் முடங்கிவிடும். தன்னம்பிக்கையோடு வெளியே வந்தாலோ... நாம் பறந்து மிதந்து உயர்ந்து செல்ல வான வெளியும் ஒளியுமாக உலகம் பரந்து விரிந்து கிடக்கிறது. - ஆசிரியர்

# ஸ்திரமான அரசுடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்றுவதே இலக்கு

(கொழும்பு)

அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்கு உள்ளாக்குவது தமது நோக்கமல்ல என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உடுநுவர பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்கு மாற்ற முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையிலும் கலந்துகொள்ளப் போவதில்லை என்பதே எனது நிலைப்பாடு.

ஏனெனில், ஸ்திரமான ஒரு அரசாங்கத்துடன் இருந்து எமது மக்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஒத்துழைப்பு வழங்குவதே எமது தேவையாக இருந்தது.

ஆயினும், தேவையான நேரத்தில் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம் இடம்பெற்றால் அது தொடர்பில் விமர்சிப்பதற்கான சுதந்திரம் இந்த அரசாங்கத்தினுள் எமக்குள்ளது.

ஆயினும், அதனூடாக ஒரு சில சக்திகள் எதிர்பார்க்கும் விடயங்கள் இடம்பெறாவிடின் அந்த சக்திகள் எம்மைப் பற்றி பல்வேறு வதந்திகளைப் பரப்புவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றார்.

# சவுதியில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்களை நாடு திரும்பக் கோரிக்கை

சவுதி அரேபியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் இலங்கையர்களை நாடு திரும்புமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

சவுதி அரேபிய அரசாங்கம் அறிவித்துள்ள பொது மன்னிப்புக் காலத்தை சாதகமாகப் பயன்படுத்தி இலங்கை பிரஜைகள் நாடு திரும்ப வேண்டும் என அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சவுதி அரேபியாவில் கடமையாற்றிவரும் 5000 தொடக்கம் 6000 வரையான இலங்கையர்கள் நாடு திரும்பமுடியாத நிலையில் உள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார். சவுதி அரேபியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறுவதற்காக ஜூலை மாதம் 3 ஆம் திகதிவரை பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலத்திற்கு பின்னதாகவும் சட்டவிரோதமான முறையில் அந்நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் இரண்டு வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என சவுதி அரேபிய சட்டம் கூறுகிறது.

சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு திரும்பும் முகமாக சவுதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதுவராலயம் 24 மணிநேரமும் தனது சேவையை வழங்குகிறது.

இந்நிலையில் சவுதியிலுள்ள இலங்கையர்கள் 400 பேர் நாடு திரும்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரி[illegible]துள்ளார்.

# வெலிக்கடை சிறையிலிருந்து 100 பெண் கைதிகள் மாற்றம்

(கொழும்பு)(

கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் தடுப்புப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 100 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அமைச்சின் செயலாளர் G.S.விதானகே குறிப்பிட்டார்.

சிறைச்சாலை நிர்வாக வசதிகளைக் கருத்திற் கொண்டே இவர்கள் மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அமைச்சின் செயலாளர் G.S.விதானகே குறிப்பிட்டார்.

போதைப்பொருள் விற்பனை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலர் வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் தடுப்புப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்கள், குறித்த பிரிவினை சோதனையிடுவதற்கு அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்காமல் அண்மையில் எதிர்ப்பை வெளியிட்டதாக சிறைச்சாலையின் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கையிலான கைதிகள் குறித்த சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போனதாகவும் சிறைசசாலை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# பட்டப்பகலில் வீடுடைத்து திருட்டு; 16 பவுண் நகைகள் கொள்ளை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வற்றாப்பளை கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றிலிருந்து 16 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டின் உரிமையாளர்கள் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து வீட்டை உடைத்து உட்புகுந்த திருடர்கள் வீட்டினுள் இருந்த தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வீடு திரும்பிய குறித்த வீட்டு உரிமையாளர்கள் வீடு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து முள்ளியவளை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தடையங்களை சேகரித்ததுடன் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

எனினும் இத்திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடையதாக கருதப்படும் ஒருவர் மீது தாம் முறைப்பாடு செய்துள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். (125)

# தோட்டச்செய்கை

ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் விவசாயிகள் சிறுபோகச் செய்கைக்கான முன்னேற்பாடுகளான நிலத்தைப் பண்படுத்தல், பயிரிடுவதற்கான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக வெங்காயம், புகையிலை போன்றவை அதிகளவில் பயிரிடவுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.(85)

# பாடசாலை மாணவர்களின் சண்டை குடும்பச்சண்டையாக மாறியது

(முள்ளியவளை)

பாடசாலை சிறுவர்களுக்கிடையேயான சண்டை முற்றி குடும்பங்களுக்கிடையேயான சண்டையாக மாறிய சம்பவம் ஒன்று முல்லைத்தீவு முள்ளியவளை மூன்றாம் வட்டாரப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகமேலும் தெரியவருவதாவது,

குறித்த பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் ஒரே வயதான இரண்டு சிறுவர்கள் பாடசாலை விட்டு வீடு திரும்பும் போது ஒருவருக்கொருவர் பட்டப்பெயர் சொல்லி சண்டையிட்டுள்ளனர்

அச்சமயம் அங்கே வந்த ஒரு சிறுவனின் தந்தை மற்றய சிறுவனைத் தாக்கிவிட்டு தனது மகனை அழைத்துக்கொண்டு வீடு சென்றுவிட்டார். இதனைக் கண்டவர்கள் அடிவாங்கிய சிறுவனின் பெற்றோரிடம் தெரிவித்தனர். பின்பு இரண்டு குடும்பங்களும் கைகலப்பில் ஈடுபட முயன்றவேளை

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத் திற்கு வந்த பொலிஸார் இரு குடும்பத்தினரையும் சமாதானப்படுத்தி அனுப்பியதாக சம்பவத்ததை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தார்கள். (125)

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 40

வே. அர்ச்சுணன்

கடற்புலிகள் அணியில் இருந்த மூத்த தளபதிகளில் ஒருவராக காதர் இருந்தபோதிலும் இறுதிவரைக்கும் பெரியள விலான முக்கிய பொறுப்புக்கள் எவையும் இவரிடம் ஒப்படைக் கப்படவில்லை. இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டு வந்தபோதிலும் குறிப்பாக அவருக்கு முக்கிய பொறுப்புக் களை வழங்கிவிட்டால் ஒரு வேளை கடற்புலிகளின் விசேட தளபதி சூசையின் தரத்திற்கு முன்னுக்கு வந்துவிடுவார் என்ற அச்சம் விடுதலைப் புலிகளிடம் இருந்துவந்தது. இதற்கு பிரதான முட்டுக்கட்டையை கடற்புலிகளின் விசேட தளபதி சூசையே போட்டுவந்தார் என கடற்புலிகள் கதைத்து வந்தனர்.

புலிகள் இயக்க பயிற்சிப் பாசறையில் நான்காவது படைப்பிரிவில் பயிற்சியை முடித்துக்கொண்ட காதர் கடற்புலிகள் அணி பிரிக்கப்பட்ட பொழுது அதில் இணைந்து கொண்டார். இருந்த போதிலும் இறுதி வரைக்கும் கடற்புலிகளின் சண்டைத்தொகுதி படகுகளை வழிநடத்துவதிலும் வலிந்து கடற் சண்டைகளை மேற்கொள்கின்ற பொறுப்புகளிலுமே இவர் ஈடுபட்டு வந்தார். இவர் உயிருடன் இருந்த வரைக்கும் கடற்புலிகளின் தள-பதிகளில் ஒருவர் என்ற நாமம் மட்டுமே இவரிற்கு புலிகளால் வழங்கப்பட்டிருந்தது. வன்னிக் களமுனையில் இறுதியாக சுண்டிக்குளம், சாலைப் பகுதி யில் நடந்த சண்டையில் இவர் சாவைத் தழுவிய பின்னர், கேணல் என்ற பதவி வழங்கப்பட்ட பொழுது தான் பல போராளிகளிற்கும் தளபதிகளிற்கும் கடற்புலிகள் அணியில் ஒரு அனுபவம் மிக்க தளபதி பதவி நிலைகள் எதுவும் வழங்கப்படாமல் இருந்து சாவைத் தழுவியது தெரிய வந்தது.

அதுவரைக்கும் காதரிற்கு கடற்தொழிலாளர் சமாசங்களின் மேலாளர் என்ற உப்புச் சப்பில்லாத பதவியைக் கடற்புலிகளின் தளபதி சூசை வழங்கியிருந்தார். சில வேளை களில் தன்னையும், காதர் "சைற்" எடுத்துவிடுவாரோ என்ற அச்சம் சூசையிடம் இருந்திருக்கலாம் என கடற்புலிப் போராளிகள் தங்களுக்குள் கதைத்துக்கொண்டது ஒன்றும் இரகசியமானதல்ல. தாம் சொல்கின்ற எல்லாவற்றிற்கும் தலையாட்டுகின்ற போராளிகளை தளபதிகளாகவும், அரசியல்துறைப் பொறுப்பாளர்களாகவும், சூசை நியமித்திருந்ததாக ஒரு விமர்சனமும் கூட அக்காலப்பகுதியில் நிலவியது. ஆனால் எந்தவொரு விமர்சனத்தையும் கணக்கில் எடுக்காமல் சூசை தனது எண்ணப்படியே எல்லாவற்றையும் செய்துவந்தார். பிரபாகரனும் சூசைக்கு ஒத்தாசையாகவே இருந்து வந்தார்.

சூசையின் நடவடிக்கைகளில் பிழை பிடிக்கின்ற செயற்பாட்டில் பிரபாகரன் ஒருபோதுமே இறங்கியது கிடையாது. சூசையைப் பொறுத்தவரையில் கடலோரப் பகுதிகளையும், கட-லோர மக்களையும் தனது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும் அந்தப் பகுதிகளுக்குரிய நிர்வாகத்தை கடற்புலிகளே மேற்கொள்ளவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் ஏனைய தளபதிகள் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் ஆகியோரின் விமர்சனங்களையும் சூசை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக சூசையால் நியமிக்கப்பட்டிருந்த விநாயகம் என்ற தளபதி சூசைக்கு மிக விசுவாசமாக செயற்பட்டு வந்தபோதிலும் இவர் தொடர்பில் ஏனைய புலிப்போராளிகளிற்கு அச்சமான உணர்வே காணப்பட்டு வந்தது. காரணம் போராளிகளையும் தளபதி-களையும் போட்டுக் கொடுப்பதில் விநாயகமும் தளபதி மங்களேசும் படு கில்லாடிகள் என கடற்புலிகளிடையே பரவலான பேச்சு இருந்தது. இதனால் இவர்கள் இருவரிற்கும் பயந்தே செயற்பட்டு வந்தார்கள்.

சூசையைக் கண்டால் வராத பயம் இவர்கள் இருவரையும் கண்டால் கடற்புலிப் போராளிகளிற்கு இயல் பாகவே வந்துவிடும். தமது குறை நிறைகள் தேவைகள் என்பனவற்றை கடற்புலிகளின் தளபதி சலீம் தான் பக்குவமாக சூசையிடம் சொல்லி அவர்களின் குறைகளைத் தீர்த்து வந்தார். இதனால் கடற்புலிகள் மத்தியில் சலீம் என்ற தளபதி மீது எப்பொழுதும் மதிப்பும் மரியாதை யும் இருந்து வந்தது. சலீம் என்ற இந்தக் கடற்புலிகளின் தளபதி இறுதி யுத்தத்தின் போது சாலைப் பகுதி யில் காயமடைந்து பின்னர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காது சாவைத் தழுவினார்.

இவ்வாறு பல போட்டிகள் பொறாமை கள் தளபதிகள் மற்றும் கீழ்மட்டத்தில் இருந்த புலிகளிடத்தில் நிலவிய பொழுதிலும் வெளிப்படையாக எத னையுமே குறிப்பிட முடியாமல் இறுதி வரைக்கும் மௌனமாக இருக்கவேண்டிய சூழலே நிலவி வந்தது. இருந்த போதிலும் ஒரு சில கடற்புலிப் போராளி கள் சூசை மற்றும் விநாயகம், மங்களேஸ் போன்றோரின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு கச்சிதமாக காய்நகர்த்திக் கொண்டிருந்தனர். இவர்களில் முக்கியமான ஒருவர் அண்ணாத்துரை. இவரும் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவராவார். இவரிற்கு சமாசங்களில் கணக்குகள் குறை நிறைகளை கண்காணிக்கும் பொறுப்பு சூசையால் வழங் கப்பட்டிருந்தது.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வரையான பல கடற் தொழிலாளர்கள் சமாசங்களில் உள்ளவர்களை தனது கைக்குள் போட்டுக்கொண்ட அண்ணாத்துரை பெரும் நிதி மோசடிகளில் ஈடு பட்டு வந்ததுடன் பொதுமக்களுக் கென சுனாமி பேரவலம் இடம் பெற்ற பொழுது பல வெளிநாடு களும் தன்னார்வத் தொண்டு நிறு வனங்களும் வழங்கிய பெருமள வான உதவிப் பொருட்களை சமா சங்களில் இருந்த ஒரு சில மோசடிப் பேர்வழிகளுடன்இணைந்து சுருட்டிக் கொண்டதுடன் தனது மனைவியினதும் பிள்ளைகளின தும் உறவினர்களினதும், வங்கிக் கணக்குகளில் பெருமளவான நிதியை வைப்பில் இட்டு வந்தார். குறிப்பாக புலிகளால் இயக்கப்பட்ட தமிழீழ வைப்பகம் மற்றும் கிராமிய வங்கி என்பனவற்றில் வைப்பில் இடாமல் அரச வங்கிகளில் வைப்புச் செய்து வந்தார்.

இவ்வாறு புலித் தளபதிகளில் சிலர் நிதிமோசடிகளிலும் பொதுமக்கள் மீதான சுரண்டுதல்களிலும் ஈடுபட்டு வந்தனர். அண்ணாத்துரையின் நிதி மோசடி ஒன்று மாத்தளன் பகுதியில் சூசையால் கண்டுபிடிக்கப்படுகிறது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொழுது சூசை முப்படைகளின் தளபதி என்ற பொறுப்பை வகித்து வந்தார். ஆனால் அண்ணாத் துரையை தானிருந்த இடத்திற்கு அழைத்த சூசை எச்சரிக்கை மட்டும் செய்துவிட்டு அண்ணாத்துரையை விடுவித்து விட்டார். இவ்வாறு ஒரு சிலர் பெரியளவிலான நிதி மோசடிகளிலும் வேறு பல மோசடிகளிலும் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு பல மோசடிகள் இறுதிக் கட்டங்களிலேயே புலிகளின் உயர் மட்டத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இறுதிக் கட்டத்துக்குள் வந்திருந்த சூழ்நிலையில் நிதி மோசடிகள் தொடர்பிலும் சிவில் நிர்வாகம் தொடர்பிலும் புலிகளால் கவனம் செலுத்த முடியாத சூழ்நிலையே காணப்பட்டது. ஏனெனில் களமுனை மிகவும் குறுகிய வட்டத்திற்குள் வந்திருந்ததுடன் போரும் தீவிரமாக இடம்பெற்று வந்தது. அத்துடன் போரியலிற்கு தேவையான ஆயுதங் கள் மற்றும் விநியோக மார்க்கங்கள் இன்றி புலிகள் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் பிற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த முடியாத சூழலே நிலவி வந்தது.


ஒட்டுமொத்தத்தில், கடற்புலிகள் அணியினர் கடலிலே கடற் சண்டை களிலே பல சாதனைகளையும், வெற்றிச் சண்டைகளையும் மேற் கொண்ட போதிலும் உள்ளகத்தில் பல முரண்பாடுகளையும், சவால் களையும் சந்தித்துக் கொண்டே இருந்தனர். அத்துடன் இலங்கை அரசிடம் காணப்பட்ட நவீன போர்க் கப்பல்கள் மற்றும் நவீன ராடர் வசதிகள் என்பனவற்றிற்கு இணை யாக தாக்குப் பிடிக்கக் கூடிய அள விற்கு கடற்புலிகளின் வளம் குறை வாகவே காணப்பட்டது. இந்தக் குறைந்த வளங்களை தமிழ் ஊட கங்கள் பெரிய வளங்களாக காட்ட முற்பட்டதே ஒழிய புலிகளின் சரி யான பலம் தொடர்பில் மதிப்பீடு செய்யத் தவறியதும் புலிகளின் அழிவிற்கு ஒரு புறத்தில் வழி கோலியது. தொடர்ந்தும் தமிழ் ஊட கங்கள் செய்துவந்த தவறுகளையும் புலிகளை அவை எவ்வாறு அழித்தன என்பது தொடர்பிலும் தொடர்ந்து பார்ப்போம்..

(தொடரும்)

**புலித் தளபதிகளில் சிலர் நிதிமோசடி களிலும் பொதுமக்கள் மீதான சுரண்டுதல் களிலும் ஈடுபட்டு வந்தனர். கடற்புலித் தளபதிகளில் ஒருவரான அண்ணாத்துரை யின் நிதி மோசடி ஒன்று மாத் தளன் பகுதியில் சூசையால் கண்டுபிடிக்கப்படுகிறது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொழுது சூசை முப்படைகளின் தளபதி என்ற பொறுப்பை வகித்து வந்தார். ஆனால் அண்ணாத்துரையை தானி ருந்த இடத்திற்குஅழைத்த சூசை எச்சரிக்கை மட்டும் செய்துவிட்டு அண்ணாத் துரையை விடுவித்து விட்டார். இவ்வாறு பல மோசடிகள் இறுதிக் கட்டங்களிலேயே புலி உயர் மட்டத்தினரால் கண்டு பிடிக்கப்பட்டது.**







ஐக்கிய தேசியக் கட்சியின் "தொடர்பாடல் செயலணி" க்கான நிர்வாகிகள் தெரிவு, கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

# தென்னிலங்கையில் அடைமழை; கடும் வெள்ளம், மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

தென் இலங்கையில் அடைமழை காரணமாக ஆறு மாவட்டங்களில் மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அருகில் வளிமண்டலத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருப்பதால் மப்பும் மந்தாரத்துடன் கூடிய மழைக் கால நிலை ஏற்பட்டிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதன் விளைவாக கேகாலை, இரத்தினபுரி போன்ற இடங்களில் 200 மில்லி மீற்றர்கள் வரை மழை வீழ்ச்சி ஏற்படும் வாய்ப்பு உண்டு என்றும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

காலநிலையில் ஏற்பட்டிருக் கும் திடீர் மாற்றத்தின் விளைவாக மேல், தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களின் சில பிரதேசங்களில் கடும் மழையும், ஏனைய பிரதேசங்களில் தொடர் மழையும் பெய்யும். ஏனைய பிரதேசங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யலாம்.

இதே நேரம், மழை பெய்யும் போது அடிக்கடி காற்றின் வேகமும் அதிகரிக்க முடியும். இக்காலநிலை மாற்றத்தின் விளைவாக புத்தளம் முதல் காலி ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பிலும் அதிக மழை பெய்யும். அத்தோடு இக்கடற் பரப்பு கொந்தளிப்பாகவும் காணப் படும்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவுற்ற 24 மணிநேர மழை வீழ்ச்சிப் பதிவுப்படி இரத்தினபுரியில் 77.1 மி. மீ. ஆகக்கூடிய மழை பெய்துள்ளது.

தற்போது இடைப்பருவப் பெயர்ச்சி மழைக்கால நிலை . நிலவுகின்றது. என்றாலும் தென்மேல் பருவப் பெயர்ச்சி மழைக் காலநிலை ஆரம்பமாகமுன் னர் வானிலையில் இவ்வாறான திடீர் மாற்றங்கள் ஏற்படுவது வழமை.

இக்காலநிலை அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலநிலையில் திடீரென ஏற்பட்டிருக்கும் மாற்றத்தையொட்டி மலை சார்ந்த ஆறு மாவட்டங்களிலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் 24 மணிநேர மண்சரிவு முன்னெச்சரிக்கையை விடுத்தது.

இது தொடர்பாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி குமாரி வீரசிங்க குறிப்பிடுகையில், காலநிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக மலை சார்ந்த பிரதேசங்களுக்கும் அதிக மழை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் மாத்தறை, காலி, களுத்துறை, இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கே இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே இப்பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் மக்கள் மண்சரிவு தொடர்பாக மிகவும் விழிப்பாக இருப்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## அமெரிக்கா, பின்லாந்து, சுவீடனில் புகலிடக் கோரிக்கையாளர்கள் அடைக்கலம்

(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அமெரிக்கா, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளில் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவிற்கு படகு மூலம் சென்ற இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள், படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக டுபாயில் அடைக்கலம் கோரியிருந்தனர்.

மனிதாபிமான அடிப்படையில் குறிதத இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் டுபாயில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

45 பேர் இந்தப் படகில் பயணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அமெரிக்கா, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளில் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் படகுப் பயணிகளில் பெண் ஊடகவியலாளர் ஒருவரும் உள்ளடங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 33 பாரிய குற்றங்களை காட்டிக் கொடுத்தது உள்ளாடை

(கொழும்பு)

போதைப்பொருள் பக்கற்றுகள் 10 ஐ உள்ளாடையில் மறைத்து வைத்திருந்த போது கைதுசெய்யப்பட்ட ஒருவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது 33 குற்றச்செயல்கள் தொடர்பிலான தகவல்கள் வெளியாகியுள்ளன.

கம்பஹா குற்றத்தடுப்புப் பிரிவினரே 35 வயதான ஒரு குழந்தையின் தந்தையான குறித்த சந்தேக நபரை வெலிவேரிய பகுதியில் வைத்து நேற்று கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் குறித்த சந்தேகநபரை சோதனை செய்தனர். இதன்போது, அவர் தனது உள்ளாடையில் மறைத்து வைத்திருந்த சுமார் 300 கிராம் அடங்கிய போதைப்பொருள் பக்கற்றுகள் 10 ஐ மீட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி இடுப்பில் மறைத்து வைத்திருந்த திருகாணிகளை கழற்றும் ஆயுதமொனறை மீட்டுள்ளனர். அவைத்தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே 33 குற்றச்செயல்கள் தொடர்பிலான விபரங்கள் வெளியாகியுள்ளன.

அவை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 18 சம்பவங்கள் தொடர்பிலான பொருட்களை மீட்டெடுத்துள்ளனர்.

கம்பஹா, வெலிவேரிய, நிட்டம்புவ, மினு வாங்கொடை, வியாங்கொட மற்றும் வீரகுர பகுதிகளிலுள்ள வீடுகளிலேயே குறித்த சந்தே நபர் தங்க நகைகள் உட்பட பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துள்ளார்.

குறித்த சந்தேநபர் பொலிஸ் அதிகாரியின் வீட்டிலும் சுமார் 25 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

# செய்தது பொய் முறைப்பாடு; அனுபவிப்பது சிறைவாசம்

(கொழும்பு)

பொய் முறைப்பாடு செய்தவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் 6 மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்துள்ளதுடன் 1500 ரூபா அபராதமும் விதித்துள்ளது.

கொழும்பு, கொம்பனி வீதியில் பிரதமர் காரியாலயத்திற்கு அண்மையில் தனியார் நிறுவனத்தில் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாகவே குறித்த நபர் கொம்பனி வீதி பொலிஸில முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளராகவிருந்த கந்தசாமி கமல்ராஜ் என்பவரே இவ்வாறு பொய்முறைபாடு செய் துள்ளார். இவருக்கே கோட்டை நீதவான் திலின கமகே 6 மாதங்கள் ஒத்திவைக கப்பட்ட சிறைத்தண்டனையும் 1500 ரூபா தண்டமும் விதித்துள்ளார்.

களஞ்சியசாலையிலிருந்து 72 ஆயிரத்து 864 ரூபாவே திருடப்பட்டுவிட்டதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த களஞ்சியசாலை இருக்கும இடத்தைவைத்துப் பார்க்கும் போது திருடுவதற்கான சந்தர்ப்பம் மிகமிக குறைவாகும் என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்தே நீதவான் மேற்கண்டவாறு தண்டனையை விதித்தார்.

## பாதை அனுமதியை இரத்துச் செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

போராட்டத்தில் பங்கேற்ற பேருந்துகளின் பாதை அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்ய தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்சமயம், தமது சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, ஞாயிறு நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக் கணிப்பைத் தற்காலிகமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அஞ்சன பிரியஞ்சித் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தகவல் தெரிவிக்கையில்,

மேல்மாகாணத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் 6 பேருந்துகளின் பேக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

அத்துடன், மாகாண மட்டத்தில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பேருந்துகள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முனைப்புகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டது.

## பெண்களின் தகவல்களை மாற்றி வெளிநாடு அனுப்புவது குறித்து எச்சரிக்கை


(கொழும்பு)

வெளிநாடுகளுக்குத் தகவல்களை மாற்றி தொழிலுக்காக பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. போலியான தகவல்களை வழங்கி வெளிநாடு செல்வதற்கு முயற்சித்த பலர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டதாக பணியகத்தின் பிரதி இணைப்பதிகாரி மங்கள ரந்தெனிய தெரிவித்தனர்.

பணிப்பெண்கள் தவிர்ந்த வேறு தொழில்களுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பெண்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். .எனவே, போலியாக தகவல்களைத் தயாரிக்கும் முகவர் நிலையங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு பணியகம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறு செல்பவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குவதாகக் குறிப்பிட்ட அவர், அவர்களைக் காப்பாற்றுவதற்காக நடவடிக்கைகளை முன்னெடுப்பது சிரமமானது எனக் குறிப்பிட்டார். எனவே, இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இயன்றவரை தடுக்குமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

# ஓரணியில் திரண்டு ஆதரவளித்தால் அரசியல் உரிமைகளை வெல்லமுடியும்



கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக எமது பிரதேசம் அழிக்கப்பட்டுள்ளது. தற்போதைய கால கட்டத்தில் நாம் அபிவிருத்திப் பாதையில் மாற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டியவர்களாய் உள்ளோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி அச்சுவேலி தம்பாலை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தலைவர் ஜெ.ஜெயதரன் தலைமையில் நடைபெற்ற தம்பாலைக் கிராம சமூக முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் இடம் பெற்ற கொடிய யுத்தம் காரணமாக எமது பிரதேசம் அழிக்கப்பட்டு உள்ளது தற்போதைய கால கட்டத்தில் நாம் அபிவிருத்திப்பாதையில் மாற்றத்தை நோக்கிப் பயணிக்க வேண்டியவர்களாய் உள்ளோம். இப்பிரதேசத்தின் அபிவிருத்தி எதிர் கால நலன் ஆகியவை இளைஞர்களாகிய உங்கள் கைகளிலே தங்கியுள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தவறானவர்களின் கைகளில் பிரதேசசபையினை ஒப்படைத்தமை காரணமாக இப்பிரதேசத்தில் எதுவிதமான அபிவிருத்திப்பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று தவறை உணர்ந்து உங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலின்போது இத்தவறை உணர்ந்து எமக்கு ஆதரவளித்திருக்கும் பட்சத்தில் இப்பிரதேசத்தில் பல்வேறு கட்டுமானப்பணிகள் மற்றும் அபிவிருத்திப்பணிகளை சிறந்த முறையில் முன்னெடுத்திருக்க முடியும் எனத் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் உங்கள் பிரதேசத்தில் பல்வேறு உட்கட்டுமானப் பணிகளும் அபிவிருத்திப்பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இவற்றினை எம்மாலே மேற்கொள்ள முடியும் இதனை உணர்ந்தவர்களாய் உங்களுடைய வளமான எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டவர்களாய் இப்பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளில் அக்கறை கொண்டவர்களாய் நடைமுறைச் சாத்தியமான முறையில் சிந்தித்து செயற்படும் எமது தலைவரின் அரசியல் கரங்களை பலப்படுத்தி எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஓரணி திரளவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலிப்பிரதேச இணைப்பாளர் செல்வராசா லிங்கேஸ், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும், கோப்பாய் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவருமான ஐங்கரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கட்டுமீறிய விலை; கவனமெடுக்கக் கோரிக்கை

(குருநகர்)

நவாலி வீதி ஆனைக்கோட்டை மற்றும் மானிப்பாய் வீதி கட்டுடை ஆகிய இடங்களில் அமைந்துள்ள குடிவகை நிறுவனங்களில் குடிவகைகளின் விலைகள் கட்டுப்பாட்டு விலைகளில் இருந்து அதிகப்படியான விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக வாடிக்கையாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மேற்படி இரு நிறுவனங்களும் குடிவகைகளை வாங்கிச் செல்கின்ற கடைகளாகவே உள்ளன. பாவனை செய்யும் இடமாக இல்லாமல் இருந்தும் புட்டிகளில் அடிக்கப்பட்ட விலைகளில் இருந்து முப்பது, நாற்பது ரூபா கூடிய விலைகளில் விற்பனை செய்வதும் சுட்டிக் காட்டத்தக்கது.

மதுப்பிரியர்கள் அதனை வெட்கத்துக்கஞ்சி சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவராமையால் தினமும் அவர்களது காட்டில் மிஞ்சிய இலாபமூட்டும் கொள்ளை நடாத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலால் பகுதி விலைக்கட்டடுப் பாட்டு அதிகாரிகள் இத்தகைய நிறுவனங்களைக் கண்டும் காணாமல் விட்டு வைப்பதுமேன் என மதுப்பிரியர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (68)

# வேலணை - அராலிச் சந்தி வீதி புனரமைப்பு நிறைவு

(வேலணை)

வேலணை வங்களாவடிச் சந்தியில் இருந்து யாழ். நோக்கி வரும் பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக அராலிச் சந்திப் பகுதியே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் பெய்த கடும் மழையால் அரிப்புக்குள்ளாகியிருந்த சிறிய குண்டுகள் பாரிய குழிகளாக மாறியதனால் பயணிகள் போக்குவரத்துச் செய்வதற்கு பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

குறிப்பாக நயினாதீவுக்குச் செல்லும் சுற்றுலாப்பயணிகளும், புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, போன்ற பகுதிகளுக்குச் செல்லும் அரச ஊழியர்களும், பொது மக்களின் போக்குவரத்தை எளிமைப்படுத்தும் நோக்கில் இவ்வீதியின் குண்டுகளுக்கு தார்கற்கள் நிரப்பப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

3 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட பகுதியைக் கொண்ட இவ்வீதி புனரமைக்கப்பட்டதால் இரணடாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர். (21)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளி வருகிறது வாரமலர்.

வாரமலர் தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 23. 05. 2013



அமெரிக்காவின் போர்களும் பொய்களும்

புலிகளின் வீழ்ச்சி சுதுமலையில் இந்திய விமானம்...

வெற்றிவிழாவும் முள்ளிவாய்க்கால் நிகழ்வும்

சீனாவின் சிவன் ஆலயத்தில் தமிழில் கல்வெட்டு

காணி விற்றவர் உயிரை இழந்தார்

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் இதுதான் தினமுரசு

## காலிறுதியில் சானியா ஜோடி



(புருசெல்ஸ்)

பெல்ஜியம் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு இந்தியாவின்சானியா மிர்சா, சீனாவின் ஜியா செங் ஜோடி முன்னேறியது.

பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸில் பெல்ஜியம் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் சானியா, ஜியா செங் ஜோடி, செக் குடியரசின் எவா ஹிர்டினோவா, அமெரிக்காவின் லின்ட்சே ஜோடியை எதிர் கொண்டது. இதன் முதல் செட்டை 6-2 என கைப்பற்றிய சானியா ஜோடி, இரண்டாவது செட்டையும் 6-4 என வென்றது. முடிவில், சானியா, ஜியா செங் ஜோடி 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்குள் நுழைந்தது.

# பிளே ஓப் சுற்று இன்றைய ஆட்டம்

**மைதானம் : டில்லி இரவு : 8.00 மணி**




## திரைப்படமாகின்றது ஸ்ரீசாந்தின் சூதாட்டம்

(டில்லி)

ஸ்ரீசாந்தின் கிரிக்கெட் சூதாட்டவாழ்க்கையை பின்னணியாகக் கொண்டு மலையாளத்தில் திரைப்படம் தயாரிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட பிரபல கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் கடந்த வாரம் டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு வாழ்நாள் தடை விதிக்க கிரிக்கெட் சங்கம் திட்டமிட்டுள்ளது.

அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு 7 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில் ஸ்ரீசாந்தின் கிரிக்கெட் சூதாட்ட வாழ்க்கையை பின்னணியாகக் கொண்டு மலையாளத்தில் ஒரு படம் தயாராக உள்ளது. அந்தப் படத்துக்கு கிரிக்கெட் என்று பெயரிடப்பட்டுள்ளது. மலையாள படத் தயாரிப்பாளர்கள்சாஜி கைலாஸ், ஏ.கே.சாஜன் இருவரும் சேர்ந்து இந்தப்படத்தை தயாரிக்கிறார்கள். கதை- வசனத்தை சாஜன் எழுதுகிறார்.

## மான்செஸ்டர் யுனைட்டட் சம்பியன்




(லண்டன்)

இங்கிலிஷ் பிரிமியர் கால்பந்து தொடரில் மான்செஸ்டர் யுனைட்டட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இங்கிலாந்தில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்ற, இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் நடைபெற்றது. கடைசிச் சுற்று லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டட், வெஸ்ட் புரோம்விச் ஆல்பியான் அணிகள் மோதின. விறுவிறுப்பான இப்போட்டியின் முடிவில் 5-5 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

மற்றொரு போட்டியில், மான்செஸ்டர் சிட்டி அணி 2-3 என்ற கோல் கணக்கில், நார்விச் அணியிடம் தோல்வி அடைந்தது. ஆர்சனல் அணி 1-0 என நியூகாசில் அணியை வீழ்த்தியது. செல்சி அணி 2-1 என்ற கோல் கணக்கில் எவர்டன் அணியை தோற்கடித்தது. லீக் சுற்றின் முடிவில், 38 போட்டியில் 28 வெற்றி, 5 சமநிலை, 5 தோல்வி உட்பட 89 புள்ளிகள் பெற்ற மான்செஸ்டர் யுனைட்டட் அணி முதலிடம் பிடித்தது. இதன்மூலம் பிரிமியர் கால்பந்து தொடரில், 13ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. அடுத்த இரண்டு இடங்களை மான்செஸ்டர் சிட்டி (78 புள்ளி), செல்சி (75) அணிகள் பிடித்தன. இந்த மூன்று அணிகளும் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெற்றன. நான்காவதாக இடம் பிடித்த ஆர்சனல் அணி (73 புள்ளி), சம்பியன்ஸ் லீக் தொடருக்கான பிளே-ஓப் தகுதிச் சுற்றில் விளையாடும் வாய்ப்பை பெற்றது.



## தொடரை சமன் செய்வோம்

(லண்டன்)

முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்தமை மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் அடுத்த போட்டியில் ஒருங்கிணைந்து செயற்பட்டு தொடரை சமன் செய்வோம் என நியூசிலாந்து அணிக் கப்டன் பிரெண்டன் மக்கலம் தெரிவித்தார்.

ஒரு மணிநேரத்தில் ஏற்பட்ட குழப்பங்களில் இந்தத் தோல்வி ஏற்படக் காரணம். முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணிக்கு இணையாக நாங்கள் நல்ல ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருந்தோம். பந்து வீச்சு ஏதுவான இந்த ஆடுகளத்தில் ரிம் சௌத்தி சிறப்புற பந்து வீசி இங்கிலாந்து அணிக்கு நெருக்கடி கொடுத்தார்.

முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அவர்களின் பொறுப்பற்ற ஆட்டமே இரண்டாவது இனிங்ஸில் ஒரு மணி நேரத்திற்குள் நாம் விக்கெட்டைப் பறிகொடுக்கக் காரணம். அடுத்த போட்டியில் அணியாக இணைந்து வெற்றிக்காகப் போராடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எப்பொழுதும் சிறப்புத்தான்



(லண்டன்)

இந்திய அணியுடன் மோதும் போட்டி எப்போதுமே சிறப்பானது என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் மொகமட் ஹபீஸ் தெரிவித்தார். இங்கிலாந்தில், வரும் ஜூன் 6-23ஆம் திகதிகளில் சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இதில், இந்தியா, அவுஸ்ரேலியா உள்ளிட்ட எட்டு அணிகள் விளையாடுகின்றன. பி பிரிவில் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவு, பாகிஸ்தான், இந்திய அணிகளுடன் இடம்பிடித்துள்ளது. இதன்படி, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஹபீஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அணியுடன் மோதும் போட்டி எப்போதுமே சிறப்பானது. இதற்காக நாங்கள் காத்திருக்கிறோம். இரு அணிகளும் 100 சதவீதம் தங்களது சிறப்பான திறமையை வெளிப்படுத்தும் என நம்புகிறேன். தவிர, இங்கிலாந்தில் உள்ள சூழ்நிலையில் பங்கேற்பது உற்சாகமானது. இத்தொடருக்கு முன் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து அணிகளுடன் விளையாடுவது, இதில் சாதிக்க உதவும் என்றார்.



கைதடி தென்கிழக்கு சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கயிறிழுத்தல் போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி பி அணி கிண்ணம்வென்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைதடி சித்திவிநாயகர் சனசமூக முன்றலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி பி அணியும், கைதடி தெற்கு மின்னொளி ஏ அணியும் மோதின. ஆதரவாளர்களின் கரகோஷங்களுக்கு மத்தியில் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி பி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (அசி)

## கிண்ணம் வென்றதில் மகிழ்ச்சி



தொடர்ந்து கிண்ணம் வென்றதன் மூலம் எனது பழைய நிலையை அடைந்திருப்பதாகவே உணர்கின்றேன். மட்ரிட், ரோம் ஆகிய தொடர்களில் கிண்ணம் வென்றது சிறப்பானது. எனது உடற்தகுதி மீண்டும் பழைய நிலையை அடைந்துள்ளது. இதற்கு எனது மருத்துவரின் ஆலோசனையை முறைப்படி கடைப்பிடித்ததே முக்கிய காரணம். ரோம் ரென்னிஸ் போட்டியில் பெரடருடன் மோதியது சிறப்பானதாக இருந்தது. அவர் ஒரு சிறந்த வீரர். சிரேஷ்ட வீரர். அவருடன் விளையாடும் போது நாங்கள் பல உக்திகளைக் கற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு போட்டிகளிலும் வெல்ல் வேண்டும் என்ற இலக் குடனேயே களமிறங்குகிறேன். இருப்பினும் அந்தச் சூழலில் இருக்கும் மனநிலையைப் பொறுத்த வெற்றி தோல்வி அமையும் என ஸ்பெயின் வீரர் நடால் தெரிவித்தார்.





சென். ஜோண்ஸ் கல்லூரியின் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 19ஆம் திகதி சிறப்புற நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றன. இதில் இடைவேளை நிகழ்வுகள் பார்ப்போர் கண்களைக் ஈர்த்துக்கொண்டதுடன் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். இறுதியில் பங்குகொண்ட அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இப்போட்டியின் பிரதம விருந்தினராக பரியோவான் ஆலய குருவானவர் வணக்கத்திற்குரிய டனேந்திரா கலந்து கொண்டு சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக்கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், உறவினர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்தினர். (20)



## தெல்லிப்பளை பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்.மாவட்ட பிரதேச செலயக வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத் தவை எல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக்கொண்டன. இருப்பினும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி வீராங்கனைகளின் சிறப்பானஆட்டத்தை சங்கானைப் பிரதேச செயலக அணியால் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தைக் கைப் பற்றிக் கொண்டது.

## வேலணை சிறுவர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு

(வேலணை)

வேலணை மத்திய சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு மத்திய சிறுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர் அ. கிரிஷா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, தீவக வலய முன்பள்ளி இணைப்பாளர் - ஆசிரிய ஆலோசகர் கி.ப. ஆரூரன், கௌரவவிருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலாளர் இராஜகோபால், வேலணை சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி ற. பஞ்சலிங்கம்,வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய அதிபர் பு. இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக வேலணை மத்திய சிறுவர் முன்பள்ளிப் பொறுப்பாளர் இ. சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் ஊர் பெரியோர், பெற்றோர், உறவினர்கள், நலன் விரும்பிகள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாகமுட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (21)

## விளையாட்டுச் செய்திகள்

## ஊர்காவற்றுறை, மானிப்பாய் மகளிர் உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட உடற்பயிற்சி அணிகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் அணி முதலிடத்தையும், இரண்டாமிடத்தினை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை பருத்தித்துறை சித்தி விநாயகர் அணியும் பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி முதலிடத்தையும், இரண்டாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் பெற்றுக் கொண்டன.

## மாலினி சகலதுறையில் கலக்கல் கிண்ணம் வென்றது நெற்கொழு கழுகு



மாலினியின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் நெற்கொழு கழுகுகள் பெண்கள் கிண்ணத்தைக் கைப் பற்றிக்கொண்டது.மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் அணிக்கு ஆறு பேர் கொண்ட பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. ஐந்து ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு அரியாலை சிறிகலைமகள் அணியும், நெற்கொழு கழுகு அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன. இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கழுகுகள் அணி மாலியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கழுகுகள் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மாலினி 15, மேரி கொல்டா, சுகிர்தா, தர்சி தலா ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழினி, அபர்னா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். பதிலுக்கு 40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை சிறிகலைமகள் அணி, ஆரம்பம் முதல் தடுமாறத் தொடங்கியது. குறிப்பாக, மாலினியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இறுதியில் அரியாலை சிறிகலைமகள் அணி நான்கு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத்தழுவியது. இதில் அபர்னா 10, கௌதமி 08 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மாலினி இரண்டு, தர்சி, சுஜீதா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இதன் மூலம் நெற்கொழு கழுகுகள் பெண்கள் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (17)

# கூட்டமைப்பின் ஒற்றுமையை கொள்கைகளல்ல, பயமே காப்பாற்றுகிறது

ஓ கடவுளாரே! உம்மை நாம் பயத்தாலேயே வணங்குகிறோம் - அவ்வாறே இங்கும் த.தே.கூவின் ஒற்றுமையை கொள்கைகளல்ல. பயமே காப்பாற்றுகிறது.

த.தே.கூ எந்த நேரத்திலும் சிதறிப் போகலாம் அல்லது சிதறடிக்கப்படலாம் என்ற வகையிலேயே அதனுள்ளே நெருக்கடிகள் வேகமாகப் புகைந்து கொண்டிருப்பது வெளிப்படை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையில் எந்தப் பிரச்சினையும் இல்லை என திரு சம்பந்தர் அவர்கள் கூறுவது "எங்கப்பன்



குதிருக்குள் இல்லை" என்பது போல் உள்ளது. இப்போது எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறுமனே ஒரு பெயரளவு அமைப்பாக தமிழரசுக் கட்சியின் சட்ட அங்கீகாரத்தில் தொங்கியதாகவும் வீட்டுச் சின்னத்தைத் தவிர வேறொன்றுமில்லை எனவும் உள்ளதோ அவ்வாறே இருக்க வேண்டுமென தமிழரசுக்கட்சிக்காரர்கள் பிடிவாதமாகவே உள்ளனர். தமிழரசுக் கட்சிக்காரர்கள் தமது கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளை தமக்கு சமத்துவமான பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேர்தற் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று நிற்பவர்கள் தமிழரசுக் கட்சிக்காரர்களும் ஏற்றுக் கொள்ளும் விதமாக ஒரு ஸ்தாபன அமைப்புத் திட்டத்தைக் கொண்டவர்களாக இல்லை.

த.தே.கூத். தலைவர்கள் தமது கூட்டை இன்னமும் கலைந்து போய்விடாமல் வைத்திருப்பதற்கு - சில வலுவான காரணிகள் உள்ளன:

◗ த.தே.கூ விலிருந்து இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் யாரையாவது விலக்கினால் அந்த நபர் த.தே.கூ வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் தூக்கிக் கொண்டு அரசாங்கத்தின் பக்கம் சேர்ந்து விடுவாரோ! அப்படி இல்லாவிட்டாலும், தனியாக ஒரு பிரிவாக இருந்து தமக்கு அரசியற் தலையிடி தருவாரோ என்ற அச்சமே இன்று த.தே.கூ.வின் பிரதானமான தலைவர்களிடம் முக்கியமாக தமிழரசுக் கட்சியின் தலைமைத் தலைவர்களிடம் நிறைந்துள்ளது. இப்போது காட்டப்படும் ஒற்றுமை சிதறிப் போனால் அடுத்த தேர்தலின் போது வெற்றிபெறுவதில் . பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுமே என்ற கவலையும் அவர்களை நிறைத்து நிற்கின்றது.

◗ தமது கூட்டமைப்பிலிருந்து வெறுமனே ஒன்றிரண்டு பேர் இப்போதைக்கு பிரிந்து பேனாலும் அது இப்போது அரசுக்கு எதிராக தாம் விடுகின்ற சவால்களுக்கு இருக்கும் பலத்தை இல்லாமல் அழித்து விடும் என தமிழரசுக் கட்சியின் தலைவர்களின் மத்தியில் நிலவும் பிரதான-மான அச்சம்.

◗ தாம் இப்போது தமிழரசுக் கட்சியோடு இணைந்து கூட்டாக இருப்பதாலேயே தமக்கு மக்களின் வாக்குப் பலம் உள்ளது. தமிழரசுக் கட்சியை விட்டுப் பிரிந்து போனால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தாம் தோற்க வேண்டி நேரிடலாம் என சுரேஸ் அவரது கூட்டாளி ஆனந்தன் மற்றும் ரெலோ செல்வம் போன்றோரிடம் மிகத் தெளிவாகவே தென்படுகின்ற பயக் களை.

◗ தமக்குள் பிரிவுபட்டு - பிளவுபட்டு இரண்டு கூட்டுக்களாக ஆகிறபோது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள தீவிர தமிழ் தேசியவாத சக்திகளின் ஆதரவு யார் பக்கம் அதிகமாகச் செல்லும் என்பது பற்றி த.தே.கூ தலைவர்களிடையே உள்ளூர நிலவும் பயம்.

◗ தமக்குள் பிளவுபட்டுக் கொண்டால் இப்போது ஒருமித்த குரலில் தமக்கு ஆதரவளிக்கும் பிரபல தமிழ் நாளேடுகளின் ஆதரவுப் பிரசாரங்களும் பிளவுபட்டுப்போகுமே என்பதால் ஏற்படும் கிலேசம்.

◗ ஒற்றுமையாக இருந்தே மக்கள் மத்தியில் உறுதியான நம்பிக்கையை வளர்க்க முடியாத தாங்கள் பிரிந்து போனால் மக்கள் தம்மைக் கைவிட்டு அரசை நோக்கி ஆதரவைத் திருப்பி விடுவார்களோ என்ற அச்சம்.

◗ த.தே.கூக்.காரர்களோடு தொடர்பில் உள்ள இந்திய அதிகாரிகளும் "நீங்கள் பிளவுபட்டீர்களானால் உங்களுக்கு எங்களிடமிருந்து கிடைக்கும் உதவிகள் ஒத்துழைப்புகள் தொடரமாட்டா" என்று விடப்பட்டுள்ள எச்சரிக்கைகளால் ஏற்பட்டுள்ள கிலேசம்.

◗ த.தே.கூக்காரர்களுடன் தொடர்பிலிருக்கும் மேலைத் தேச நாடுகளின் தூதரக அதிகாரிகள் த.தே.கூ தலைவர்களிடம் "நீங்கள் எப்படியும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" எனக் கேட்டிருப்பதனால் எங்கே அந்தத் தூதரகங்களோடு உள்ள உறவுகள் மற்றும் அவற்றிடமிருந்த அடிக்கடி கிடைக்கும் உதவிகள் தமக்கு எட்டாப் பழமாகி விடுமோ என நிலவுகின்ற கவலை.

◗ வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் பொதுவாக இப்போது இருக்கும் கூட்டின் காரணமாகவே உற்ற துணையாக இருக்கிறார்கள் அது இல்லாமற்போனால் வெளிநாடுகளிலுள்ள தமிழர்களிற் பெரும்பான்மையோர் இலங்கை அரசியலை மறந்தே போவார்கள் என்பதும் யதார்த்தம்.

இவ்வாறான பல்வேறு காரணிகளே இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களை இணைத்து வைத்திருக்கின்றன.

ஆனால் இந்த மேலோட்டமான பசையொட்டுக் கூட்டு ஒற்றுமை இன்னும் எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்னும் கேள்வி நாளும் பொழுதும் பரந்து விரிந்து கொண்டே இருக்கிறது.


- வரதர் கட்டுரையிலிருந்து.

# தேநீர் மாதிரித்தான் வாழ்க்கை

தங்கள் துறையில் உயர்ந்த நிலையை எட்டிவிட்ட அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தங்கள் முன்னாள் ஆசிரியரை சந்தித்து பேசிக் கொண்டிருந்தனர். வாழ்க்கையிலும், செய்யும் வேலையிலும் ஏற்படும் மன அழுத்தம் பற்றிப் பேச்சுத் திரும்பியது. வாழ்க்கை இயந்திரத் தனமாகவும் அமைதி இன்றியும் மன உளைச்சலைத் தரக் கூடியதாகவும் உள்ளது என ஆதங்கப்பட்டனர்.

கேட்டுக்கொண்டிருந்துவிட்டு சமையலறைக்கு சென்ற ஆசிரியர் ஒரு பாத்திரத்தில் நிறைய தேநீர் கொண்டுவந்து வைத்தார். கூடவே அதை ஊற்றிக் குடிப்பதற்காக விதம் விதமான கோப்பைகளையும் கொண்டு வந்தார். அவற்றில் வெள்ளி, பீங்கான் போன்ற விலை உயர்ந்த கோப்பைகள் முதல் கண்ணாடி பிளாஸ்டிக், காகிதம் போன்ற சாதாரண கோப்பைகள் வரை பல வகைகள் இருந்தன.

அனைவரையும் அழைத்து கோப்பைகளை எடுத்து கொண்டு நீங்களே தேநீரையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஆசிரியர் கூற வந்திருந்தவர்கள் விலை உயர்ந்த கோப்பைகளை முதலில் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். மிக விலை உயர்ந்தவை மற்றும் அழகான கோப்பைகள் எடுக்கப்பட்டுவிட அடுத்து வந்தவர்களுக்கு சாதாரண கோப்பைகளே கிடைத்தன. மிகச் சாதாரண கோப்பைகள் யாராலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அனைவரும் தங்களுக்கு கிடைத்த கோப்பையில் தேநீர் எடுத்துக் கொண்டனர்



இப்போது ஆசிரியர் பேசலானார், "உங்கள் கைகளில் உள்ள கோப்பைகளைப் பாருங்கள். உங்களுக்கு மிகச் சிறந்தது வேண்டுமென்று விரும்புகிறீர்கள். கிடைக்காத பட்சத்தில் கிடைத்ததில் சிறந்ததை தேர்ந்தெடுக்கிறீர்கள். அது இயல்புதான் என்றாலும் அவைதான் மன அழுத்தம், ஏமாற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு காரணம். சிந்தித்துப் பாருங்கள். கோப்பை எத்தனை விலை உயர்ந்ததாக இருந்தாலும் அவை தேநீரின் தரத்தை மாற்றப் போவதில்லை. விலை குறைந்ததாக இருந்தாலும் தேநீரின் சுவை குறைந்து விடப் போவதில்லை. உண்மையில் சொல்லப் போனால் சில கோப்பைகளில் உள்ளே என்ன உள்ளது என்பது கூடத் தெரியாது. களைத்துப் போய் இருக்கும் நேரத்தில் நம் தேவை தேநீர்தான். ஆனால் நாமோ கோப்பைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

அது மட்டுமல்ல. நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்தவர் கையில் என்ன கோப்பை இருக்கிறது என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அடுத்தவரிடம் உள்ளது விலை உயர்ந்தது என்றால் நமக்கு அது கிடைக்கவில்லையே என்ற வருத்தமும். அது சாதாரணமானது என்றால் உங்களுக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சியும் அடைந்திருப்பீர்கள்.

வாழ்க்கையும் தேநீர் போன்றதுதான். பதவி பணம் அந்தஸ்து போன்றவை கோப்பைகளாகும். அவை வாழ்க்கைக்கு உதவும் வெறும் கருவிகளே. அவைகளே வாழ்க்கை ஆகிவிடாது. கோப்பையின் மீது நாம் செலுத்தும் அதீத கவனத்தால் தேநீரின் சுவையை நாம் அனுபவிக்கத் தவறி விடுகிறோம். கோப்பையை ஒதுக்கி தேநீரை பாருங்கள்.

மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் எல்லாவற்றிலும் சிறந்ததை பெற்றிருப்பதில்லை. தாம் பெற்றிருப்பதை சிறந்ததாகக் கருதுகிறார்கள். அதனால் அவர்களை கவலைகளும் அழுத்தங்களும் அதிகமாக நெருங்குவதில்லை.

"எளிமையாய் வாழுங்கள்!
கருணையுடன் பேசுங்கள்
எல்லோரையும் நேசியுங்கள்!
வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக்கும்" என்றார் ஆசிரியர்

உண்மைதானே!



# சொன்னார்கள்...

✷ தென்னிந்தியாவில் எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு. அவர்களுடன் நட்பாகப் பழகுவதுடன், வெளியிலும் சுற்றுவேன். "கௌரவம்" படத்தில் ஒப்பந்தமான பின், என்னுடன் நடிக்க இருந்த சிரீஷுடன் நட்பாக பழகினேன். அதனால்தான் அவருடன் கிரிக்கெட் போட்டி பார்க்கச் சென்றேன். அதைப் பற்றி நிறைய பேர் கேட்கிறார்கள். சக நடிகர்களுடன் பழக்கம் இருந்தால்தான் காட்சிகளில் ஒன்றி நடிக்க முடியும். இதை திரித்துக் கூறினால் ஏற்க முடியாது.

**- ட்விட்டரில் நடிகை யாமி கௌதம்**

✷ தெலுங்கு, ஹிந்தியில் "சத்யா 2" என்ற பெயரிலும் தமிழில் "நான்தான்டா" என்றும் வெளியாகிறது எனது அடுத்த படம். படிக்காத கிரிமினல்களை விட, படித்த கிரிமினல்தான் ஆபத்தானவர்கள். உலகம் முழுவதும் இருக்கும் தாதா, ரவுடிகளின் செய்முறைகளை ஆராய்ந்து அவர்கள் செய்யாத நுணுக்கங்களைப் பின்பற்றி தன் வேலையை செய்கிறார் ஹீரோ சர்வானந்த். இந்த திரைக்கதை யாரும் யோசிக்காத [illegible]ணத்தில் இருக்கும். பிற்காலத்தில் கிரிமினல்கள் எப்படி செயற்படப் போகிறார்கள் என்பதை முன் கூட்டியே சொல்லும் படமாகவும் இது இருக்கும்.

**- இயக்குநர் ராம்கோபால் வர்மா.**

✷ எனது "ரான்ஜனா" ஹிந்திப்படம் ஒரே நேரத்தில் தமிழில் "அம்பிகாபதி" என்ற பெயரில் வெளியாகிறது. இப்படம் மூலம் சோனம் கபூர் தமிழ் சினிமாவுக்கு வருகிறார். அனில் கபூரின் மகளாக இருந்தாலும் முதல் நாள் பள்ளிக்கு வந்த மாணவியின் அமைதியை சோனத்திடம் பார்த்து வியந்து போனேன். சக நடிகையாக அவர் எனக்குச் சவாலாக இருந்தார்.

**- தனுஷ்**

✷ பஹத் பாசிலுடன் "நார்த் 24 காதம்" என்ற மலையாளப்படத்தில் நடிக்கிறேன். ஏற்கனவே பஹத்துடன் "ஆமென்" என்ற படத்தில் நடித்துள்ளேன். ஆனால் எந்த மொழியில் நடித்தாலும் வெளிநாட்டில் நடக்கும் ஷூட்டிங்கில் பங்கேற்பதில்லை என்ற விஷயத்தில் இப்போதும் கறாராக இருக்கிறேன்.

**- 'சுப்பிரமணியபுரம்' சுவாதி.**

குடும்ப செண்டிமென்ட் பாணியை கைவிட்டு நான் இயக்கும் படம் "நினைத்தது யாரோ". முழுக்க புதுமுகங்களை வைத்து இயக்குகிறேன். ரஜித், நிமிஷா பங்கேற்கும் பாடல் காட்சிகளை காஷ்மீரில் உள்ள பெல்காம் என்ற இடத்தில் படமாக்கினோம். பத்தடிக்கு ஒரு இராணுவ வீரர் என அந்த பகுதி முழுவதுமே பாதுகாப்பாக இருந்தது. ரஜினி நடித்த "வேலைக்காரன்" படத்துக்குப் பின் அந்தப் பகுதியில் படப்பிடிப்பை நடத்தி முடித்திருக்கிறோம்.

**- இயக்குநர் விக்ரமன்.**

✷ 65 படங்களுக்கு மேல் கதாநாயகனாக நடித்த பிறகு இந்த இடைவெளி நானாக ஏற்படுத்தியது. இடையில் வந்த பல வாய்ப்புகளை தவிர்த்திருக்கிறேன். மீண்டும் நடிக்க வரும்போது பெரிய பட்ஜெட் படத்தில் நடிக்க வேண்டும் என்று நினைத்து வெங்கட் பிரபுவின் "பிரியாணி" படத்தை ஒப்புக் கொண்டேன். "மாசாணி" கதையும் பிடித்திருந்தது என்பதால் அதிலும் நடித்தேன். இடைவெளிக்கு பின் வருபவர்கள் வில்லன் பாத்திரங்களில்தான் நடிக்க ஆசைப்படுவார்கள். எனக்கும் அதில் ஆர்வம் இருக்கிறது.

**- நடிகர் ராம்கி.**

✷ இந்திய சினிமாவில் என்னைக் கவர்ந்த நடிகர் சந்தேகமில்லாமல் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த்தான். காரணம், எதிர்மறை பாத்திரங்களில் நடிக்க ஆரம்பித்து, தனக்கென ஒரு வழியை உருவாக்கி, அதில் உறுதியுடன் நடைபோட்டு இந்த நாட்டின் இணையற்ற சாதனையாளராக மாறியுள்ள அவர்தான் எனக்கு இன்ஸ்பிரேஷன்.

**- 'துப்பாக்கி' வில்லன் வித்யுத் ஜம்வால்**

உலகக் கால்பந்தாட்ட இரசிகர்கள் சமீபத்தில் ஒரு நிகழ்வைப் பார்த்து அசந்து போயிருப்பார்கள். பார்ஸலோனா, மான்செஸ்டர் போன்ற க்ளப் டீம்கள் எல்லாம் கணிசமான எண்ணிக்கை வித்தியாசத்தில் தோற்றுப் போக



# வெறும் விளையாட்டல்ல

இரண்டு ஜேர்மன் கால்பந்தாட்ட குழுக்கள் ஐரோப்பிய சம்பியன்ஷிப் லீக்கின் இறுதிச் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றிருக்கின்றன. பாயெர்ன் குழுவும், டார்ட்மண்ட் குழுவும் ஜேர்மன் க்ளப் குழுக்கள். இதில் என்ன பெரிய விஷயம் என்று கேட்போருக்கு கால்பந்து விளையாட்டில் எத்தனை நுண்ணரசியல் இருக்கிறது என்பது புரியவில்லை என்று அர்த்தம்.

எப்படி இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளிடையே போட்டிகள் நடக்கும்போது அது வெறும் விளையாட்டில்லை, அதில் என்னென்னவோ தேசிய அரசியல், பன்னாட்டு அரசியல் கணக்குகள் இரசிகர் மனதில் ஓடுகின்றனவோ அதே போன்ற ஒரு தேசிய - பல ஐரோப்பிய உணர்ச்சி மோதல்கள் இந்த கால்பந்துப் போட்டியில் ஓடுகின்றன.

ஜேர்மனி ஒரு நாடுதான் சமீபத்திய ஐரோப்பிய பொருளாதாரச் சரிவில் அதிகம் பாதிக்கப்படாது தொடர்ந்து ஊக்கத்துடன் இயங்கும் பொருளாதாரம். அங்கு ஏற்றுமதி தொடர்ந்து மேலேகிக் கொண்டிருக்க, தெற்கு ஐரோப்பிய நாடுகளான, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகியன பெரும் சரிவில் உள்ளன. ஃபிரான்ஸ், இங்கிலாந்தின் விஷயமும் ஒன்றும் ஏற்கும் விதமான நிலையில் இல்லை.

இந்தக் கட்டத்தில் இரண்டு கால்பந்துக் குழுக்கள், ஜேர்மனியிலிருந்து இறுதிச் சுற்றில் விளையாட வென்று வந்திருப்பது ஐரோப்பிய நாடுகளிடையே என்னவிதமான காய்ச்சல்களை எழுப்புகிறது என்று நியூயோர்க் ரைம்ஸ் விரிவாக கட்டுரை வெளியிட்டிருக்கிறது. கட்டுரையை இந்த வலைத்தளத்தில் பார்க்கலாம்:

http://www.nytimes.com/2013/05/08/world/europe/germany-extends-its-success-to-the-soccer-field.html?_r=0&pagewanted=all

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை


06

**- டாக்டர். பிரகாஷ் -**

சிக்கலான கணிதப் புதிர்களை விடுவிக்க மூளையின் எந்தப் பகுதி நன்கு செயற்பட வேண்டுமோ, அந்தப் பகுதியை இசை நன்கு தூண்டி செயற்பட வைக்கிறது. எனவே, இசையில் ஆர்வமுடன் இருக்கும் குழந்தைகள் கணிதப் புலிகளாகவும், கணிதத்தில் புலிகளாக இருக்கும் குழந்தைகள் இசையை வெகு சீக்கிரமும் கற்க முடிகிறது.

உலகப் புகழ் பெற்ற கணித மேதை ராமானுஜனுக்கு, கணிதத்திற்கு அடுத்து இசையில்தான் பெரும் ஆர்வம் இருந்ததாம். இசை ஆர்வத்தினால் ஒரு குழலை வாங்கி அதை வாசித்துப் பயிற்சி பெற்று வாசித்ததோடு மட்டுமல்லாமல், இசை ரசனையுள்ள நண்பர்களுடன் அடிக்கடி சந்தித்து இசை குறித்த கருத்துக்களைப் பகிரவும் செய்வாராம்.

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பற்றி பரவலாக நமக்குத் தெரியாத விஷயம், அவர் மிகச் சிறந்த இயற்பியல் விஞ்ஞானி மட்டுமல்ல வயலின் இசையை மிகுந்த ஆர்வத்துடன் வாசிக்கும் கலைஞரும் கூட. எப்போதெல்லாம் தன் ஆராய்ச்சிப் பணிகள் சிக்கலாகி, தீர்வுகளைக் கண்டறிய சிரமப்படுகிறாரோ, அப்போதெல்லாம், ஒரு சிறு இடைவேளை எடுத்துக் கொண்டு, மொஸார்ட்டின் இசையை தனது வயலினில் இசைத்து மகிழ்வாராம்.





வெவ்வேறு வகையான இசையானது மூளையில் வெவ்வேறு விதமான அலைவரிசையை (அல்ஃபா, பீட்டா போன்ற) உருவாக்கவல்லவை. மிகுந்த சப்தத்துடன் கூடிய ஹெவி மெட்டல், ரொக் போன்ற இசையை விடுத்து, மெல்லிய, க்ளாசிக்கல் வகை சங்கீதத்தை குழந்தைகளைக் கேட்க வைக்கலாம்.

இசையினால் குழந்தைகளின் மூளையில் ஏற்படும் வளர்ச்சிகள் எல்லாமே, வெறுமனே இசையை, அவர்கள் கேட்பதால் மட்டுமே நிகழ்ந்து விடுவதில்லை. ஏதேனும் ஒரு இசைக் கருவியை (பியானோ அல்லது வயலின் அல்லது வேறு ஏதேனும் ஒன்று) வாசிக்கப் பயிற்சி பெறுவதே மேற்கூறிய எல்லா நல்ல பலன்களையும் ஒருசேர அளிக்க வல்லது என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளின் வயதும் அதற்கேற்ற இசைப் பயிற்சியும்:



கர்ப்ப காலத்தில்: நல்ல இனிமையான, மெல்லிய இசையை தொடர்ந்து கேட்கவும்.

பச்சிளம் குழந்தைகள்: மெல்லிய, சிறிய, தாலாட்டுப் பாடல்கள், நேர்சரி ரைம்ஸ்களை, குழந்தைகளைக் குளிப்பாட்டுகையில், உடை அணிவிக்கையில், உணவு ஊட்டுகையில், உறங்க வைக்கையில் பாடலாம். திரும்பத் திரும்ப வரும் வாக்கியங்கள் இருப்பது குழந்தைகள் கிரகித்து மகிழ்வதற்கு எளிதாக இருக்கும். தாளத்துடன் கூடிய பாடல்களை, அவர்களை மிருதுவாகத் தட்டிக் கொடுத்தோ, அவர்கள் கைகளைத் தட்டச் சொல்லியோ கற்றுக் கொடுத்தால், மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் அவர்களது பாணியில் பதிலுக்கு இசைப்பதைக் காணலாம்.

தவழும் குழந்தைகள்:

ஒன்றரை வருடம் முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகள் சின்னச் சின்னப் பாடல்களை விரும்புவர். ஞாபக சக்தி இன்னமும் முழுவதும் வளராத இந்தப் பருவத்தில் ஒரு சில வார்த்தைகளையே அவர்களால் நினைவில் கொள்ள முடியும். நகர்வும், இயக்கமும் அவர்களுக்கு மிகவும் விரும்பத் தக்கதாகி, கையசைவுகளுடன் கூடிய நேர்சரி ரைம்ஸ்கள் ஒரு வரிசைப் படி நினைவில் கொள்ள வசதியாக இருக்கும். மீண்டும் மீண்டும் சொல்லப்படும் ரைம்ஸ்களை நினைவில் வைத்திருந்து சொல்ல முடியும்.

பள்ளிக்கு முந்தைய குழந்தைப் பருவத்தில்: (pre-schoolers)

இந்தக் குழந்தைகள், நேர்சரி ரைம்ஸ், பாடல்கள், அறிமுகமான பொருள்கள், பொம்மைகள், விலங்குகள், விளையாட்டு அசைவுகள், அறிமுகமான மனிதர்கள் என அனைத்தையும் விரும்புவர். விரல், கைகளால் இசைக்கக் கூடிய கருவிகள், இசையுடனோ, அல்லது இல்லாமலோ ஒலிக்கும் பாடல்கள் போன்றவற்றை அறிமுகம் செய்யலாம். இந்தக் காலகட்டத்தில், வெவ்வேறு இசையின் வெவ்வெறு வடிவங்களை அவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். அவர்களை வெவ்வேறு விலங்குகளாக உருவகப்படுத்தி, அந்த விலங்குகளின் ஒலிகளை, வெவ்வேறு வாகனங்கள், பறவைகள் போல ஒலி எழுப்பச் சொல்லி கற்றுத் தரவும். பின்பு அவைகளை இசைவடிவில் அவர்களுக்குப் போட்டுக் காட்டவும்.

(தொடரும்)


# பொன் விழாக்காணும் ஒஸ்மானியாக் கல்லூரி

**அல்ஹாஜ் எம்.எவ்.எம்.இக்பால்**
**முன்னாள் உயர்தர மாணவர் மன்றத் தலைவர்**

*யாழ்.ஒஸ்மானியாக்* கல்லூரியின் பழைய மாணவனான முன்னாள். உயர்தர மாணவ மன்றத் தலைவர் என்ற முறையில் என் கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சியைப் பற்றி எழுதுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கட்டுரையை எழுதத் தொடங்கும்போதே ஒஸ்மானியாக் கல்லூரியில் என் பள்ளித் தோழர்களுடன் துள்ளித்திரிந்த அந்த இனிய பள்ளிப் பருவத்தின் பசுமையான நினைவுகளே என் மனதில் ஓடிக்கொண்டிருந்தன.

'யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவை













அதிபர் முபாறக் மௌலவி

ஊறும்' என்ற கூற்றுக்கிணங்க யாழூர் மக்கள் கல்வியிலும் மேலோங்கிக் காணப்பட்டார்கள். எட்டாம் வகுப்பு வரை கல்வி புகட்டும் பணியில் யாழ். மஸ்ற உத்தீன் பாடசாலை (புதுப் பள்ளி), முஹம்மதியா கலவன் பாடசாலை (அல்லாபிச்சை மாமா பள்ளி), வண்மேற்கு முஸ்லிம் கலவன் பாடசாலை (மன்ப - உல் உலூம் மத்ரஸா) ஆகிய நற்சேவை புரிந்தன. இப்படியான கனிஷ்ட பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காக யாழ். வைத்தீஸ்வரா, யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு சென்றனர்.

எனினும் அக்காலத்தில் வசதி குறைந்தவர்கள் கனிஷ்ட பாடசாலைகளில் இருந்து மேற்படிப்பைத் தொடர முடியாமல் படிப்பை விட்டு விட்டு வேறு தொழில்களை நாடுபவர்களாக இருந்தனர். இது முஸ்லிம் சமுதாயத்திற்கு கவலைக்குரிய விடயமாகவே இருந்தது.

இக்காலகட்டத்தில் இலங்கையின் தேசிய வீரரும், சிறந்த கல்விமானும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபருமாகிய அல்ஹாஜ் ரி.பி. ஜாயா அவர்களின் தலைமையிலான குழு 1938 ஆண்டிலும், 1942ஆம் ஆண்டிலும் விஜயம் செய்தது. யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் மேற்படிப்பைத் தொடர்வதற்கான ஒரு பாடசாலையை உருவாக்கவேண்டும் என்பதை இக்குழுவினர் மக்கள் மத்தியில் வலியுறுத்தினர். யாழ். முஸ்லிம் மாணவர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்கவேண்டுமென்பதே ரி.பி.ஜாயா அவர்களின் குறிக்கோளாக இருந்தது. அதனால் யாழ்ப்பாணத்திலும். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் கிளையொன்று நிறுவப்படவேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினர். எதிர்காலத்தில் முஸ்லிம் சமுதாயம் கல்வியில் மேலோங்கிக் காணப்படவேண்டும் என்றும் அதற்கான அடித்தளத்தை காலதாமதமின்றி ஆரம்பிக்கும்படியும் எடுத்துக்கூறிவிட்டுச் சென்றார்.

அதன்பின் யாழ்.முஸ்லிம் மக்கள் விழித்துக்கொணடனர். எப்படியாவது எமது பிரதேசத்தில் முஸ்லிம் கல்விக்கூடம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார்கள். அந்தக் காலத்தின் வேகத்தில் பல்வேறு பிரதானிகளும் குழுக்கள் அமைத்துக் கருத்துகள் வெளியிட்டார்கள். மகஜர்களை முன் வைத்தாரகள். ஊர் மக்களிடமும், வேறு நிறுவனங்களிலும், அரசியல் பிரமுகர்களிடமிருந்தும் பணம் திரட்ட முடிவுசெய்தார்கள். அந்தக் காலத்தில் பெரிய தனவந்தரான வி.எம்.எம்.எஸ். அப்துல் காதர் ஹாஜியார் அவர்கள் பணங்கொடுத்து உதவியது மட்டுமல்லாமல் இக்குழுவிற்கு தலைமை தாங்கினார். அவருடன் முன்னாள் யாழ்.மாநகர மேயர், வழக்கறிஞர் குவாஸி,

**ஏ.எம்.சுல்தான், கிராமசேவகர் எஸ்.ஏ.றஸீன் (எனது தாயாரின் பெரியப்பா) ஆகியோரும் அயராது பாடுபட்டனர்.**

இவர்களின் தலைமையில் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் பணம் திரட்டப்பட்டது. அப்போதைய யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம், கியூ.ஸி. அவர்கள் அரசாங்கம் வாயிலாக ஒரு பெருந் தொகைப் பணத்தை ஒதுக்கிக்கொடுத்திருந்தார். இவ்வாறாக திரட்டப்பட்ட நிதியில் இருந்து யாழ். நகரத்து முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்த 'ஷராப்ஸ்' வீதியில் காணித்துண்டொன்றை வாங்கினார்கள்.

அபிவிருத்தி செய்வதில் பெரும் பங்கு வகித்தார். அவர் கல்லூரிக்காக செய்த உதவிகளை எவராலும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

1963 ஆம் ஆண்டு பிறந்தது. கட்டடம் கல்லூரியாக மாறுவதற்கு ஆயத்தம் பூண்டது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர்கள் விஜயம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை நிலவிய போதும் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் யாழ்ப்பாணம் ஸாஹிராக்

(ஜின்னா மைதானத்திற்கு முன்பாக)

1959 ஆம் ஆண்டு மே 03 ஆம் திகதி டி.பி.ஜாயா அவர்கள் அத்திவாரக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வி.எம்.எம். அபூசாலி ஹாஜியார் அவர்களின் முயற்சியினால் ஷராப்ஸ்' வீதி என்று நாமம் பூண்டிருந்த நேரிய சாலை மாநகராட்சி மன்றத்தினரால் 'முஸ்லிம் கல்லூரி வீதி' என்ற புதிய பெயரைப் பெற்றது.

ஒஸ்மானியாக் கல்லூரியின் அத்திபாரக்கல் இட்டாலும் காலத்திற்குக் காலம் அரசியல் மாற்றங்களால் எவ்வளவோ தடங்கல்களும், இன்னலகளும் வந்தன.

அந்தச் சந்தர்ப்பத்தில் கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், அப்போதைய பிரதமர் திருமதி எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்காவின் நெருங்கிய நண்பருமாகிய மேன்மைமிக்க முஸ்லிம் தலைவர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டன. அவர்களின் தகுந்த ஆலோசனைகளின்மூலம், திட்டப்படி கட்டட வேலைகள் தங்குதடையின்றி ஆரம்பமாகின. யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்திருந்த வைத்திலிங்கம் கம்பனியினருடன் செய்த ஒப்பந்தத்தின் படி அந்நிறுவனத்தினர் கட்டடத்தை அமைத்தனர். பல இடையூறுகளையும் தடங்கல்களையும் விலக்கிக்கொண்டு "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" கட்டடம் மேலெழத் தொடங்கியது. ஒஸ்மானியாக் கல்லூரிக்கு ஆரம்பத்தில் 'ஸாஹிராக் கல்லூரி' என்ற பெயரே இருந்து வந்தது. 1962ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே 06 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களை ஸாஹிராக் கல்லூரியில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அக்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு கல்வி அமைச்சர் பதவியும் கிடைத்தது. ஆரம்பத்தில் கல்லூரியின் கட்டட வேலைகளுக்கு ஆலோசனைகளையும் உற்சாக மொழிகளையும் வழங்கிய அவருக்கு கல்வி அமைச்சர் பதவி கிடைத்ததும் கல்லூரி மீது இருந்த அக்கறை பன்மடங்காகப் பெருகியது. கல்லூரியை கல்லூரியை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம் மேற்கொண்டார்கள்.

**1963 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி யாழ். முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு நன்னாள்.**

அந்த நாள் அன்றுதான் டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் ஸாஹிராக் கல்லூரி என்று நாமம் பூண்டிருந்த எமது கல்லூரியை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார். அவருடன் வர்த்தக அமைச்சராக பதவி வகித்த திரு.இலங்கரத்ன அவர்களும் வந்து திறப்புவிழாவைச் சிறப்பித்தார்கள்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் திறப்புவிழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. அக்காலத்தில் யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அல்பிரட் தங்கராஜா துரையப்பாவும் இவ விழாவில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். இவர் கல்லூரி மீது நல்லெண்ணம் வைத்து அதன் வளர்ச்சிக்கு ஒரு உந்துசக்தியாக விளங்கினார். விழா வைபவத்தன்று இவரது தந்தை காலமாகி விட்டபோதும்கூட கல்லூரியின் நலன் கருதி திறப்பு விழாவில் கலந்துகொண்டு விழாவை சிறப்புறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எமது கல்லூரிக்கு 'ஸாஹிராக் கல்லூரி' என்ற பெயரளவில் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அத்திறப்பு விழாவின்போது டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இஸ்லாத்தின் மூன்றாம் கலீபாவாகிய உஸ்மான் (ரலி) அவர்களை நினைவுபடுத்தி 'ஒஸ்மானியாக் கல்லூரி' என்ற நாமத்தைச் சூட்டினார்கள். அன்றிலிருந்து இன்றுவரை எமது கல்லூரி 'ஒஸ்மானியாக் கல்லூரி' என்ற பெயருடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் முதன்முதலில் ஜனாப் சீ.எம்.எ.ஜிப்ரி அவர்கள் அதிபர் பதவிவகித்தார்கள். அதிபர் உட்பட ஏழு ஆசிரியர்களும் நியமனம் பெற்றனர். திரு.ஆசாரியஸ் பெர்னாந்து, திரு.பொ.சிவஞானசுந்தரம், திரு. எஸ். ஸ்ரீ.தர்மநாதன், ஜனாப் எம்.யூ.ஏ.கையூம், ஜனாப் எம்.ஐ.எம்.ஷாபி, ஜனாப் எம்.ஸீ.சலீம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர்.



முதல் நாளிலேயே 150 மாணவர்கள்வரை சேர்த்துக் கொள்ளப் பட்டனர். சில மாதங்கள் சென்ற பின் கல்லூரிக் கீதமும் தயாராகிவிட்டது. கவித்துவ புலமைமிக்க ஆசிரியர் திரு.ஆசாரி யஸ் பெர்னாந்து அவர்கள் கல்லூரிக் கீதத்தை இதமாக இயற்றிக் கொடுத்தார்கள். இந்தியா வின் தேசியகீத மெட்டிற்கு அமைவாக "வளர் கலை மாமதியோடிளந் தாரகை வானக மேலொளி மல்க" என்று அமைக்கப்பட்டிருந் தது.

அதன்பிறகு ஒஸ்மானியாக் கல்லூரி படிப் படியாக வளர்ந்தது. கல்லூரியின் விஸ்தரிப்பிற்காக அதன் சுற்று வட்டாரத்திலுள்ள காணிகளும், தென்னந்தோப்புக்களும் பயன்படுத்தப் பட்டன. அந்தவகையில் எனது தாயாரின் (பரீத் றஸீனா) தென்னந்தோப்புக் காணியும் வீடும்கூட கல்லூரியின் விஸ்தரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டன. நான் பிறந்து வளர்ந்த (10 வயது வரை) மண்ணில்தான் இன்று ஒஸ்மானியாக் கல்லூரி வீற்றிருக்கின்றது என்று நினைக்கும்போது என் மனதில் ஆனந்தம் பொங்கிவழிகின்றது.

அதிபர் ஜிப்ரி அவர்களின் தலைமையில் பதினொரு மாதங்கள் உருண்டோடின. அவர் மாற்றலாகிச் சென்றதன் பின் ஒன்றரை மாதங்கள் திரு.ஞானசுந்தரம் பதில் அதிபராகப் பணி புரிந்தார். அதன் பின்னர் 01.02.1964 முதல் ஜனாப் எம்.எம்.யூஸுப் அவர்கள் புதிய அதிகராக நியமனம் பெற்றார்கள்.இவரின் பதவிக் காலத்தில் பல முக்கிய விடயங்கள் இடம் பெற்றன.

முதன்முதலாக இவரின் பதவிக்காலத்திலேயே பச்சையும், வெள்ளையும் கலந்த கல்லூரிக்கொடி அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன் கல்லூரியின் இலச்சினையும் ஒ.எஸ்.எம்.ஏ. கபூர் ஆசிரியரால் வரைவாக்கம் செய்யப் பட்டது. எதிர்கால விளையாட்டு வளர்ச்சியைக கருத்திறகொண்டு இக்பால், ஷாபி, அலி ஆகிய இல்லங்கள் உருவாக்கப்பட்டன. அதன் பிற்பாடு கஸ்ஸாலி இல்லமும் இணைத்துக்கொள்ளப் பட்டது.

ஜனாப் யூஸுப் அதிபரின் நற்சேவைகளைத தொடர்ந்து அவர் மாற்றலாகிச் சென்றபின் 01.02.1967 முதல் ஜனாப் எம்.எம். அப்துல் குத்தூஸ் அவர்கள் அதிபர் பதவிவகித்தார்கள். அதிபர் குத்தூஸ் அவர்கள் கல்வியியல் டிப்ளோமா படிப்பிற்காக சென்றிருந்த இடைக் காலத்தில் ஆசிரியர் ஜனாப் என்.எம்.ஏ. கபூர் அவர்கள் 11.10.1967 முதல் 18.08.1968 வரை பதிலதிபராகப் பணி புரிந்தார். கல்லூரி முகப்பில் முதன்முதலாக "OSMANIYA COLLEGE JAFFNA 1963" என்ற வாசகத்தைப் பதிப்பித்த பெருமை இவரையேசாரும்.

1970 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை மீண்டும் கல்வியமைச்சராக்கியது. இச் சந்தர்ப்பம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு மீண்டும் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. தனிப்பட்ட முறையில் கல்லூரியின்மீது அக்கறைசெலுத்திய அமைச்சர் கல்லூரிக்காக நிறைய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டார். ஒஸ்மானியாக் கல்லூரியை அபிவிருத்திசெய்வதில் பெரும் முன்னோடியாகத் திகழ்ந்தார். அந்தவகையில் யாழ்.முஸ்லிம் சமுதாயமே அவருக்கு என்றும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருக்கவேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் ஒஸ்மானியாவின், போஷகராகவும், சேவகராகவும் தலைவருமாக இருந்து நல்லாசி வழங்கிய பெரியார் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு நன்றிசெலுத்தும் முகமாக எமது கல்லூரியின் மண்டபத்திற்கு 'அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் மண்டபம்' என்று நாமம் சூட்டப்பட்டது. 1972 ஆம் ஆண்டு மே 12 ஆம் திகதி அமைச்சர் அவர்களின் பொற்கரங்களாலேயே இம்மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்புவிழாவின் போது பல கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. அந்த நேரத்தில் 8ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நானும் அந்த கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியது மட்டுமல்லாமல் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு கைலாகு கொடுத்த அந்த இனிய நிகழ்வுகள்கூட என்மனதில் நீங்காத நினைவுகளாகத் தடம்பதித்து இருக்கின்றன.

அதிபர் குத்தூஸ் அவர்களின் முயற்சியால் கல்லூரியில் தொலைபேசி இணைப்பு நிரந்தரமாக்கப்பட்டது. இவரின் பதவிக் காலத்தில் பல கட்டட நிர்மாணங்கள் மேற்கொள்ளப் பட்டன. வர்த்தகக் கல்வி அறைகளும், இக் காலத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டன. பொது விஞ்ஞான ஆய்வு கூடமும் சிறப்புறப் பூர்த்தியடைந்து, இரசாயனப் பொருட்களும், உபகரணங்களும் நிரம்பிவழிந்தன.

அதிபர் குத்தூஸ் அவர்களைத் தொடர்ந்து 30.06.1974 ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அவர்கள் அதிபர் பதவியை ஏற்றார்கள். இவர் கல்லூரியில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதில் அரும்பாடுபட்டார். இவரது காலத்தில் உதை பந்தாட்டக் குழு தேர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது மட்டுமல்லாமல், கல்லூரியின் முற்றமும், வளாகமும் சீரமைக்கப்பட்டது. பசுமரங்களும், மலர்ச்செடிகளும், பயன்தரு பயிர்களும் நாட்டப்பட்டு இயற்கையான குளிர்ச்சியான சூழலை உருவாக்கிய பெருமை ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அதிபருக்கே உரித்தாகும். அத்துடன் இவரது காலத்திலேயே கல்லூரியில் "இரட்டை அலகு விஞ்ஞான ஆய்வுகூட கட்டடமும் திறந்தவைக்கப்பட்டது.

03.08.1979 ஆம் ஆண்டில் ஜனாப் ஏ.எச்.ஹாமீம அதிபர் இடமாற்றம் பெற்றதையடுத்து ஜனாப் எம்.கே.எம்.ஹனீபா அவர்கள் பதிலதிபராக கடமையாற்றினார்.

அதன்பின்னர் 03.04.1980 இல் ஜனாப் எம்.ஏ. ஆர்.ஏ. றஹீம் அதிபர் பதவி ஏற்றார். அவர் விடுமுறை பெற்றிருந்த காலத்தில், 07.08.1981 முதல் 27.12.1981 வரை ஜனாப் கே.எம்.ஹம்தூன் அவர்கள் பதிற்கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

30.06.1982 இல் மீண்டும் ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அவர்கள் அதிபர் பதவியேற்று கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்குவகித்தார். 1986 ஆம் ஆண்டில் ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அதிபர் அவர்களின் பெரும்முயற்சியால் 'பழைய மாணவர் சங்கம்' உருவாக்கப்பட்டு அச்சங்கத்தினரால் கல்லூரியின் மைதானத்தை சுற்றியுள்ள எல்லைச் சுவர்கள் யாவும் பூரணமாக்கப்பட்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1990முதல் 2003 ஆம் ஆண்டுவரை நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக ஒஸ்மானியாக் கல்லூரி மூடப்பட்டிருந்தது. இது கவலைக்குரிய விடயமாகும்.

ஏ9 பாதை திறந்து நாட்டில் சமாதானச் சூழல் நிலவிய சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒஸ்மானியாக் கல்லூரியை மீள்எழுச்சி செய்ய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், யாழ். முஸ்லிம் நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அரும்பாடு பட்டார்கள். இவர்களின் பெரும் முயற்சியாலும் இறைவனின் துணையாலும் 2003ஆம் ஆண்டு ஒஸ்மானியாக் கல்லூரி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

22.09.2003ஆம் ஆண்டில் முபாரக் மௌலவி அவர்கள் அதிபர் பதவியேற்றார்கள்.

மனிதசஞ்சாரமற்ற அடர்ந்த பற்றைகளும், பாழடைந்த இடிந்த கட்டடங்களுக்குமிடையே விஷஜந்துக்கள் நிறைந்த சூழலில்தான் முபாரக் மௌலவி ஒஸ்மானியாக் கல்லூரியைப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மீள்எழுச்சி பெற்ற கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட இவரை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அன்றிலிருந்து இன்றுவரை இவரது நற்சேவைகள் தொடர்ந்தவண்ணமாக இருக்கின்றன.

இந்த ஆண்டு ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா ஆண்டாகும். பொன்விழாவை வெகுவிமர்சையாகக் கொண்டாட அதிபர் முபாரக் மௌலவி முயற்சிசெய்கின்றார். முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஆலோசனைகளை வழங்கி பொன்விழாவைச் சிறப்பிக்குமாறு, பணிவுடன்வேண்டுகிறோம்.

பொன்விழாக்காணும் எமது ஒஸ்மானியாக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து முஸ்லிம் சமுதாயத்தில் தலைசிறந்த கல்லூரியாகத் திகழ்ந்து வைரவிழா, நூற்றாண்டுவிழா போன்ற பல விழாக்களைக் கொண்டாட வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறோம். இக்கட்டுரையை எழுதுவதற்கு எனக்கு குறிப்புகள் தந்துதவிய ஏ.சீ.நஜுமுத்தீன் ஆசிரியர் அவர்களுக்கு என் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# ஆயுர்வேதம்



## எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் நாக்கு உலர்ந்து போகிறதா?

எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் சிலருக்கு அடிக்கடி நாக்கு உலர்ந்து போகும். குறிப்பாக இரவில் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும்போல் தோன்றிக்கொண்டே இருக்கும். இது ஏனைய நோய்களுக்கு நீங்கள் பாவிக்கக்கூடிய மருந்து மாத்திரைகளால் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. குறிப்பாக இதய நோய் உள்ளவர்கள் ரத்தக் குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்பை நீக்க, சாப்பிடும் மருந்துகள் அனைத்தும் அடைப்பைச் சுரண்டி எடுக்கக் கூடியவையாகவும், வறட்சி மற்றும் சூடான வீர்யம் கொண்டவையாகவும் இருக்கக் கூடும். சூடான வீர்யத்தினால் அடைப்பை உருக்கி, அவ்விடத்திலிருந்து சுரண்டி எடுத்து வறட்சி என்னும் தன்மையால் சுண்டச் செய்யும் வீர்யமிக்க மருந்துகளால், வாயின் உட்பகுதிகளில் அமைந்துள்ள எச்சில் சுரப்பிகளில் அவற்றின் தாக்கம் உணரப்படும்.


வாயின் உட்புறம் எப்போதும் நெய்ப்புடன் எளிதில் இயங்கக் கூடியதாக இருக்க நெய்ப்பும் நெகிழ்ச்சியும் உமிழ்நீரால் கிடைக்கிறது. உமிழ்நீர் குறைந்தால் வாயும் தொண்டையும் உலர்ந்து விடும். நா வறட்சியால் நீர் வேட்கை, தாக உணர்வு ஏற்படும். பெரும்பாலும் உடலில் நிறைந்துள்ள தண்ணீரின் நிறை, குறை நிலைகளை உணர்த்தும் முக்கியப் பணியைச் செய்யும் உமிழ் நீரில் ஏற்படும் தாக்கத்தின் பிரதிபலிப்புதான் இரவில் ஏற்படும் தாக உணர்ச்சி.

அதனால் சாப்பிடும் மாத்திரைகளின் தன்மையை மருத்துவர் மூலம் கண்டறிந்து அவற்றை எப்படி எப்போது சாப்பிட்டால் வாய், நாக்குப் பகுதிகள் உலர்ந்து போகாமலிருக்கும் என்பதை அறிந்து கொள்வது நலம். இரவு உணவுக்குப் பிறகு, ஓரிரு டம்ளர் வெண்ணெய், ஆடை நீக்கிக் கடைந்துள்ள மோரில் கால் பங்கு தண்ணீர் சேர்த்துப் பருகுவது நல்லது. இந்த வகையில் கடைந்து, தண்ணீர் சேர்க்கப்பட்ட மோர் சுவையில் சிறிது அளவு துவர்ப்பு, புளிப்பும், இனிப்பும் நல்ல விகிதமுள்ளதாயிருக்கும். குடலில் ஜீரணமான பின்பும் இனிப்புச் சுவையுடையது, சூடான வீர்யம் உடையது. எளிதில் செரிக்கும். மற்ற உணவையும் செரிக்கும் அளவுக்குப் பசியைத் தூண்டிவிடும். பருகியதும் உடலுக்கும் மனதுக்கும் திருப்தி தந்து வாயு தோஷத்தைக் குறைக்கும். ஜீரண இறுதியில் இனிப்பாக மாறுவதால் பித்த தோஷத்தைத் தூண்டிவிடாது. துவர்ப்புச் சுவை, உஷ்ண வீர்யம், வெண்ணெய் நெய்ப்பு இன்றி வறட்சியான குணம் போன்றவற்றால் கபத்தையும் குறைக்கும். இப்படியாக மூன்று தோஷங்களையும் சமனம் செய்யும் உயர்ந்த குணங்கள் கொண்டது இந்த மோர். பகல் வேளைகளில் ஆடை சத்து முழுவதும் எடுத்துக் கடைந்த தயிரில் நிறைய நீர் சேர்த்து, நீர் மோர் தயாரித்து கொத்துமல்லி இலை, கறிவேப்பிலை உப்பு சேர்த்துச் சாப்பிடுவது மிகவும் நல்லது. நல்ல குளிர்ச்சியானது. நா வறட்சியைப் போக்கும்.

நல்லெண்ணெய் - தேங்காய்ப்பாலை வாயில் விட்டுக் கொப்பளித்துத் துப்புவதால் வாய் வறட்சியையும், நாக்கு வறட்சியையும் போக்கிக் கொள்ள முடியும். எள்ளை மென்று வெகுநேரம் வாயில் வைத்திருந்து பிறகு உமிழ்ந்து கொப்பளிப்பதும் நல்லதே.

இரவில் சாப்பிடும் உணவு இட்லி, தோசை என்று மாவில் செய்யப்பட்ட பதார்த்தங்களாக அமைந்திருந்தால், நடு இரவில் நாக்கு உலர்ந்துபோய் அதிக தண்ணீரின் தேவையை உணர்த்தக் கூடும். மாவினுடைய அம்சம் இரத்தத்தில் கலந்திருக்கையில் அதை நீர்க்கச் செய்து, செரிமானம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உடல் ஆட்படும்போது, நீரின் தேவைக்கான உத்தரவை நீர் வேட்கையின் மூலம் உத்தரவிடுகிறது. அதனால் நீங்கள் மாப் பண்டங்களை இரவில் சாப்பிடாமல், கோதுமையை உப்புமா, சப்பாத்தி என்ற வகையில் மாற்றி அமைத்துச் சாப்பிடவும்.

இரவில் அதிகம் தண்ணீர் பருகினால், சிறுநீரின் வெளியேற்றம் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. இதனால் தூக்கம் கெட்டுவிடக் கூடும். தூக்கம் குறைந்தால் அனேக உபாதைகள் தலைதூக்கி விடும். அதனால் உலர்ந்து போய்விட்ட நாக்குக்கு வெட்டி வேர் போட்டு ஊறிய மண் பானைத் தண்ணீரை, நாக்கின் மீது படர விட்டு, சிறிதுநேரம் வைத்திருந்து சிறிய அளவில் பருகினால், மேலும் மேலும் ஏற்படக் கூடிய நாவறட்சியை எளிதில் போக்கிக் கொள்ளலாம்.



யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் ஐக்கியதீபம் சஞ்சிகை கட்டைவேலி நெல்லியடி பல.நோ.கூ.சங்க மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது கட்டைவேலி - நெல்லியடி பல.நோ.கூ.சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர் லயன் ஜெயசங்கர் மங்கள விளக்கு ஏற்றுவதைக் காணலாம்.

# இறக்குமதியாகும் பால்மாக்களில் இரசாயன பதார்த்தங்கள் இல்லை

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளில் இரசாயன பதார்த்தங்கள் எதுவும் கலக்கப்படவில்லை என உலக சுகாதார அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு தமக்கு அறிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால் மா,வில் டிசிடி எனப்படும் இரசாயன பதார்த்தம் கலந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. பால் மா வகைகளில் இரசாயன பதார்த்தம் கலக்கப் படவில்லை என உறுதிப்படுத்துவது கட்டாயமானது என சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்தது. இந்நிலையில் உலக சுகாதார அமைப்பு பால் மா வகைகளில் இரசாயன பதார்த்தம் கலக்கப் படவில்லை என உறுதிப்படுத்தியுள்ளது.

# பரமர் சங்கமம்



"இஞ்சை உழாத மாடு வன்னிக்கு போச்சுதாம் உழ" எண்டது. அந்தக் காலக் கூற்றில் ஒன்று இவ்வாறான பரிபாசைகள் இக்காலங்களில் அருகிப் போச்சுது.

அதாலதான் பரமர் இடைக்கிடை அதனை மக்கள் மத்தயில் ஞாபக மூட்ட இந்தப் பத்தியில் வாலாயமாக்கிக் கொண்டார்.

இஞ்சை இருந்து வன்னிக்குப் போன காலம் போய், இப்ப வன்னியில இருந்து இங்கவாற நிலைமை தோன்றியுள்ளது. வன்னிக்குப் பெருமைதானே இல்லையே?

இப்ப யாழ்ப்பாணப் பெரியாஸ் பத்திரியில நடக்கிற கண்நோய் சிகிச்சைப் பிரிவுக்கு இவ்வளவு காலமும் வன்னீல இருந்து சேவை செய்த மலரவன் என்னும் புதிய வைத்தியர் வந்துள்ளார்.

2008ஆம் ஆண்டு தொடக்கம் அவ்வப்போது கண்பிரிவுக்கு சென்று வருகிறேன். இரண்டுகண்களும் 'கற்றாக்' நீக்கி "லென்சுகளும் பொருத்தப்பட்டுள்ளன. இருந்தாலும் இடையிடையே வருகின்ற குறைபாடுகளை அகற்றப் போகத்தானே வேண்டியுள்ளது.

கண்களைக் கருவிகளால் சோதித்து இரண்டு மாதத்தால் வரச் சொல்வார்கள் திரும்பத்திரும்ப அதே ஒழுங்கு முறைதான் நோயோடு அலைஞ்சுலைஞ்சேதான் கண்டது.

கடந்த 13ஆம் திகதி போனன் முதலில் உதவியாளர் பார்த்துவிட்டு அவரிடம் அனுப்பினார். அவர் கண்களைப் பார்த்துப் போட்டு இரண்டு கண்களும் செய்ததில் பிழையுள்ளது என்று சொன்னார்.

வலது கண் விழித்திரை தேய்ந்து 25 சதவீதம் உள்ளது அதனை ஒன்றும் செய்யேலாது இடது கண் 99 வீதமும் நன்றாக இருக்கிறது. கண்ணாடி பாவிக்கிறீர் நல்லது, தொடர்ந்து பாவியும் ஆறுமாதங்களாலவாரும் என்று சொன்னார்.

எனது அனுபவத்தில் ஐந்து வருடங்களில் கண்டுவிட்ட கண் வைத்தியங்களில் இப்படித் தெளிவாகப் பேசிய மருத்துவரை யாழ்ப்பாண ஆசுப்பத்திரியில் காணவில்லை.

பேசாமடந்தைகளாக செயற்பட்ட அவர்களுடன் பேசுவதென்றால் காசுகட்டி விட்டு வெளி விடுதிகளில்தான் பேச முடியுமெண்டு சொன்னார்கள் அந்த அனுபவமும் எனக்கில்லை.

வைத்தியன் நோயாளிகளுடன் பேசுவதால் 50 வீதமான நோய்கள் குணமடைகிறதாகச் சொல்கிறார்கள் அந்த அனுபவம் எனக்கு அண்டைக்கு ஏற்பட்டது.

என்னுடன் மட்டு மில்லாமல் அனைத்து கண் நோயாளிகளையும் பரீட்சித்து உங்களுக்கு இப்படி இருக்கிறது ரெண்டு வாரங்களால் வந்து கண்ணாடிக்கு சோதிச்சுக் கண்ணாடி எடுங்கள்.

கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தவே வேண்டும் உங்களுக்கு விருப்பமா அப்படியெண்டால் பதிஞ்சு போட்டு உங்களுக்கு வசதியான நாட்களில் வந்து செய்து கொள்ளுங்கள்.

இப்படி வாயோரியாகப்பேசிக்கொண்டிருந்த ஒரு கண் வைத்தியரை அண்டைக்குத்தான் முதன்முதலாகப் பார்த்தேன் வெளி விடுதிகளுக்கு அவர் போவதில்லை, வைத்தியசாலை சேவையை மட்டுந்தான் செய்கிறாரென்றும் அங்கே நிண்டவர்கள் சொன்னார்கள்

'மக்கள் சேவை மகேசன் சேவை' எண்டனர் நம்முன்னோர் அத்தகைய ஒருவர் வன்னீல இருந்து கிடைச்சிருப்பது நாங்க செய்த புண்ணியமோ இல்லையோ சொல்லுங்க பாப்பம்...

# பெண்கள் நிலையறிந்து செயலாற்றும் கிராம சேவையாளர் தேவை

(யாழ்ப்பாணம்)

முள்ளியவளை கணுக்கேணி மேற்கு கிராம சேவையாளராக கடமையாற்றும் எமது பிரிவின் கீழ் கடந்த வன்செயலின் பின்பு மீள் குடியமர்வுக் காலப்பகுதியில் இருந்து இன்று வரை கடமையாற்றி வருகிறார். ஆனால் மக்கள் சேவையை அவர் புரிந்துணர்வாக செயற்படத்தவறியுள்ளார். என கணுக்கேணி மேற்கு மாதர்கிராம அபிவிருத்திக்சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில், பொது மக்களோடு மிகவும் பாரதூரமான முறையில் முரண்பாடு அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. அதன் காரணமாக கிராம சேவையாளரை மாற்றம் செய்ய வேண்டுமென கருத்து பரவியது. கிராம சேவையாளர் ஒரு நோய்வாய்ப்பட்டவர். முந்திய காலங்களை விட தற்போது அவருடைய வேலை செம்மையாக செய்ய முடியாது அவதியுற்று இருக்கிறார். நடைமுறை செயல் பேச்சு வார்த்தை இவற்றின் மூலம் எமது மாதர் சங்கம் புரிந்துள்ளமையால் அத்துடன் ஒரு சுதந்திரம் இல்லாத ஒரு மாதர்சங்கம் எமது மாதர்சங்கம், அதற்கு முழுமையாக கிராம சேவையாளரே இடையூறாக உள்ளார்.

தயவு செய்து அவருடைய மனநிலையைப் புரிந்து அவருக்கு சிறிதுகாலம் ஓய்வு கொடுங்கள் இன்னுமொரு கிராம சேவையாளரை எமது கிராமத்திற்கு பதில் கடமைக்கு அமர்த்துங்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதியமைச்சரை ஆஜராக உத்தரவு

எரிபொருள் துறை பிரதியமைச்சர் சரண குணவர்தனவை கடவுச்சீட்டுடன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கம்பஹா மாவட்ட மேலதிக நீதவான் கவிந்திரா நாணயக்கார நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு மரண அச்சுறுத்தல் விடுத்ததுடன சிறு குழந்தையை கடத்திய குற்றச்சாட்டின் முதலாவது சந்தேக நபரான பிரதியமைச்சர் சரண குணவர்தனவே நீதிமன்றத்திற்கு அறிவிக்காமல் வெளிநாடொன்றிற்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்தே மேலதிக நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபரான பிரதியமைச்சர் நாடு திரும்பியதும் கடவுச்சீட்டுடன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்

வீரக்குலம் எனுமிடத்திலேயே 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி இரவு இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# யாழிலிருந்து தியத்தலாவை சென்ற பேருந்து விபத்தில் 24பேர் காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 24 பேர் காயமடைந்துள்ளனர்.

கொத்மலை, ரம்பொடை பிரதேசத்திலுள்ள செங்குத்துச் சரிவு ஒன்றில் பேருந்து கவிழ்ந்து விழுந்ததில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த பஸ் 60 அடி ஆழமான பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 21 பேர் கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை மூவர் வகுஹபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்


(22.05.2013 - புதன்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 08 ஆம் திகதி.
நட்சத்திரம் சித்திரை பின்னிரவு 01.21 வரை. திதி துவாதசி.
பிற்பகல் 04.16 வரை. இராகுகாலம் 11.52 - 01.22 வரை.
சுபநேரம் 04.22 - 05.52 வரை. சித்தம்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம்  | செயல்களில் ஆரவாரம் தவிர்க்கவும். பிறரிடம் வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். தொழில், சூழ்நிலை தொந்தரவு தரலாம். குறைந்த வரவு. எதிர்ப்புகள் வரும். நண்பர்கள் நம்பிக்கை தருவர். போக்குவரத்தில் கவனம். |
| ரிஷபம்  | ஆரவாரம் இல்லாமல் நடந்து கொள்வது நல்லது. குடும்பத்தினரின் ஆலோசனை நல்வழி தரும். தொழில் சராசரி. வரவை விட செலவு கூடும். உடல் நலத்திற்கு உணவில் கவனம். போட்டிச் சூழலில் உங்களை பொறுமை காக்கும். |
| மிதுனம்  | உங்கள் தனித் திறமையால் எண்ணியது முடிப்பீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால், சந்தோஷம். வழிபாடு நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பதவி அனுகூலம். தொட்டது துலங்கும். |
| கடகம்  | மனதில் குழப்பமும், செயலில் தடுமாற்றமும். அக்கம் பக்கத்தவரிடம் அதிகபேச்சுக் கூடாது. தொழில், உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு. ஆடம்பரங்களை இன்று தவிருங்கள். புத்திரரால் மன மகிழ்வு. |
| சிம்மம்  | திட்டமிட்ட பணியில், மாற்றம் செய்ய நேரிடலாம். நண்பரிடம் கருத்து வேறுபாடு வரும் கவனமாக நடக்கவும். தொழில் இடையூறு சரி செய்வீர்கள். புதிய செலவு வரும். போக்குவரத்தில் கவனம். குடும்பத்தினர் பாசம் மனதுக்கு இதம். |
| கன்னி  | மங்கலத்தன்மையுடன் பேசுவீர்கள். இடையூறு விலகி. நன்மை வளரும். தொழில் தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். அரசு உதவி பெற அனுகூலம். கணவன் மனைவி அன்யோன்யம். பக்தி ஈடுபாடு. |
| துலாம்  | உங்களைச்சரி என்று நிரூபிப்பதில் அதிக நேரம் செல்லும். உடல்நலத்தில் கவனம். தொழில், புது முயற்சி வெல்லும். பிறருக்குக்காட்ட செலவு செய்வதை தவிர்க்கவும். மாணவர்கள். சாகச விளையாட்டு வேண்டாம். நண்பர் உதவுவர். |
| விருச்சிகம்  | இனிய நினைவுகளால் மனதில் மகிழ்ச்சி. இயலாதவருக்கு, உதவி புரிவீர்கள். சமூகத்தில் மதிப்புயரும். தொழில், முன்னேற்றம். தாராள பணவரவு. அரசால் அனுகூலம். குறைசொன்ன உறவினரும் உங்களை புரிந்துகொள்வர். |
| தனுசு  | மனதில் உற்சாகம் கூடும். வேலையில் ஆர்வம். தொழில், வளர்ச்சியால் பெருமிதம். உபரி பணவரவு. கடன் குறையும். உறவினர் நண்பர்களிடமிருந்து நிறைவான ஆதரவு. வெளியூரிலிருந்து நற்செய்தி. விருந்து உண்டு மகிழ்வீர்கள். |
| மகரம்  | நண்பருடன் முக்கிய ஆலோசனை நடத்துவீர்கள். முடியாதிருந்த பணியை, நிறைவேற்ற புதிய வழி பிறக்கும். தொழில் வளர்ச்சிக்கு அனுகூல பலம். கொடுத்த கடன் திரும்பும். விருந்து, விசேஷத்தில் பங்கு. பயண வாய்ப்பும் உண்டு. |
| கும்பம்  | உண்மை, நேர்மையில் கூடுதல் கவனம். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். அதிக உழைப்பால் தொழில் முன்னேற்றம். குடும்பத்தேவைக்கு தாராள செலவு செய்வீர்கள். உறவினர் உங்களைக் கொண்டாடுவர். அமைதி மனநிலை. |
| மீனம்  | இனிய அனுபவம் ஒன்றை நினைத்து, நெகிழ்வீர்கள். உழைப்பில் நம்பிக்கை. தொழில், வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். வரவு முன்னேற்றம். குடும்பத்தில் சுப நிகழ்ச்சித் திட்டம். கடந்த நாள்களில் இருந்த உடல் குறைகள் தீரும். |

10) வினாக்களுக்கு விடை தருக.

1. 

1) இத்திண்மப் பொருளுக்கு இருக்கக்கூடிய உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............................

2) ஓரங்களின் எண்ணிக்கை யாது? ..............................

2. அடுத்துவரும் உரோமன் எண்குறிகளை குறிப்பிடுக V, X, XV, XX

3. ஒரு பெட்டியில் 78 முட்டைகள் இருந்தன. அவ்வாறான 10 பெட்டிகளில் இருக்கக்கூடிய முட்டைகளின்


4. 230 ரூபாவை ஐந்து தாள்க்காசுகளில் வழங்கக்கூடிய முறையினை குறிப்பிடுக.
100 ரூபா ---------- 50 ரூபா ---------- 20 ரூபா ---------- 10 ரூபா ----------

5. 3 Kg 500 g இல் எத்தனை 500g பொதிகளை உருவாக்கலாம்? ..............................

6. நிசாரின் நிறை 22 Kg 500g ஆகும். இந்நிறையின் இரண்டு மடங்கு அவனுடைய தந்தையின் நிறையாகும்

7. 1 l கட்டிப்பாலிற்கு 750 ml நீர் சேர்க்கப்படுகிறது. எனின் 2 l கட்டிப்பாலுக்கு சேர்க்கப்படவேண்டிய நீரின் அளவு யாது? ..............................

8. உருவிற்குப் பொருத்தமான சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



**9. 2402 இவ்வெண்ணை எழுத்தில் எழுதிக்காட்டுக.** ..............................

**10. 9909 இவ்வெண்ணிற்கு ஒன்று கூடிய எண் எது?** ..............................

11. 2 m 85 cm நாடாவில் இருந்து ஒவ்வொன்றும் 95 cm நீளமுள்ள எத்தனை துண்டுகள் வெட்டி எடுக்க முடியும்? ..............................

12. 327 மிட்டாய்களை 3 பேருக்குப் பகிர்ந்து கொடுக்கும்போது ஒருவர் பெறும் மிட்டாய்களின் எண்ணிக்கை யாது? ..............................

**விடைகள்**

1) ஜப்பானிய மொழி
2) காலி, மாத்தறை
3) ஆழி, பரவை
4) கரை + ஓரம்
5) உருவாகின்றது
6) கடலினுள் புவி நடுக்கம் ஏற்படுவதால்

02)
1. எமது நாட்டிற்கு மிக அருகிலுள்ள நாடு இந்தியாவாகும்.
2. சூரியக்கதிர்களில் இருந்து வானவில் நிறங்களை காணமுடியும்.

03)
1. பூனைக்கு ஒரு காலம்
2. பண்டிதன் ஆவான்
3. குன்றிமணி மங்காது
4. குடிகளும் அவ்வழி

04)
1. ஆட்பதிவு
2. ஆலமரம்
3. காருண்யம்
4. பரம்பரை

05) 1. வானொலி
2. நுழைவாயில்
3. காலை
4. சூரியன்

06) 1. Colock
2. Flower
3. Bulb
4. Tree

07) 1. அப்பா வேலைக்குச் சென்றார்.
2. தம்பி ஓடுகிறான்

08)
1. 2
2. 3
3. 1
4. 3
5. 2
6. 1
7. 3
8. 2
9. 2
10. 4
11. 3
12. 3
13. 1
14. 3
15. 2
16. 2
17. 1
18. 4
19. 3
20. 1

09)
1. தபேலா
2. கொம்பு
3. தம்பட்டம்
4. நாதஸ்வரம்

(விடைகள் தொடரும்)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
40 நிமிடம்

# கல்வி முரசு



ஆசிரியர்:- சண் சுதர்சன்

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

கடலினுள்ளே புவி நடுக்கம் ஏற்படும்போது சுனாமி அலை உருவாகின்றது. இது கடலை அன்டிய பிரதேசங்களில் மிக உயரத்திற்கு மேலெழுந்து கரையோரப் பகுதியை முழுமையாகத் தாக்கியழிக்கும். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையை சுனாமியலை தாக்கி பாரிய சேதத்தை ஏற்படுத்தியது. சுனாமி என்ற சொற்பதம் ஜப்பானிய மொழியில் இருந்து வந்ததாகும். சுனாமி இலங்கையின் கரையோரப்பகுதிகளான காலி, மாத்தறை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைத் தாக்கி பெரும் அழிவை ஏற்படுத்தியது.

1) சுனாமி என்ற சொற்பதம் எந்நாட்டு மொழிக்குரியது?
2) இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இரண்டு தருக?
3) கடல் எனும் சொல்லுக்கான ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?
4) கரையோரம் எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.
5) அஃறிணை, படர்க்கை, நிகழ்கால ஒருமை வினைச்செல்லை எழுதுக.
6) சுனாமி ஏற்படக்காரணம் யாது?

02) **பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.**

1) இந்தியாவாகும் / நமது / அருகிலுள்ள / எமது / மிக /நாட்டிற்கு
2) வானவில்லின் / சூரியகதிர்களில் /காணமுடியும் / இருந்து / நிறங்களை

03) **பின்வரும் பழமொழிகளினது முடிவினை எழுதிக்காட்டுக.**

1) ஆனைக்கு ஒரு காலம் ..............................
2) கண்டது கற்கப் ..............................
3) குப்பையில் கிடந்தாலும் ..............................
4) அரசன் எவ்வழி ..............................

04) **சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | 1. ஆட்பதிவு | 2. ஆல்பதிவு | 3. ஆற்பதிவு | 4. ஆள்பதிவு |
| 2) | 1. ஆலமரம் | 2. ஆழமரம் | 3. ஆளமரம் | 4. ஆலமறம் |
| 3) | 1. காருன்யம் | 2. காருண்யம் | 3. காறூன்யம் | 4. கருணியம் |
| 4) | 1. பறம்பறை | 2. பரம்பறை | 3. பரம்பரை | 4. பறம்பரை |

**05) கருத்தினை தமிழில் தருக.**

1. Radio ..................... 2. Gate .....................
3. Morning ..................... 4. Sun .....................

**06) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. கடிகாரம் ..................... 2. மலர் .....................
3. மின்குமிழ் ..................... 4. மரம் .....................

**07) சிங்களச் சொல்லுக்கான கருத்தினை தமிழில் தருக.**

1. தாத்தா வெட(ட்)ட கியா .....................

2. மல்லி துவனவா .....................


**08) சரியான விடையின் கீழே கோடிடுக.**

1. பாக்கு பரவலடைவதற்கு காரணம்
   1) வெடித்தல் 1) நீர் 3) விலங்கு 4) காற்று

2. அதிகளவு மாப்பொருள் கொண்ட உணவுப் பொருள்
   1) வாழைப்பழம் 2) தேங்காய் 3) கோதுமை 4) ஈத்தம்பழம்

3. கொத்தாகப்பூக்கும் பூவினம்
   1) சூரியகாந்தி 2) கொன்றை 3) மல்லிகை 4) கோப்பி

4. பின்வரும் மின்சுற்றுக்களில் ஒளிராத மின்சுற்று



5. உலகிலே மிகவும் ஆழமான சமுத்திரம்
   1) இந்து சமுத்திரம் 2) பசுபிக் சமுத்திரம்
   3) அந்தாட்டிக்சமுத்திரம் 4) ஆட்டிக்சமுத்திரம்

6. பின்வருவனவற்றுள் மீன்பிடி உபகரணம் எது?
   1) அத்தாங்கு 2) நீர்ப்பம்பி
   3) செக்கு 4) கடப்பாறை

7. இலங்கையானது எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது
   1) 10 2) 25 3)09 4) 12

8. உடற்பயிற்சியோடு மனதிற்கும் வலிமை கிடைக்கும் செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?
   1) தியானப்பயிற்சி 2) சூரியநமஸ்காரம் 3) சதுரங்கம் 4) நோன்புபிடித்தல்




9. பின்வரும் பிராணிகளிடையே அதிகளவு மோப்ப சக்தி உடையது.
   1) பூனை 2) நாய் 3) எலி 4) ஆமை

10. பின்வரும் இடங்களில் அமைதியைப் பேணவேண்டிய இடம் எது?
   1) பாடசாலை 2) சந்தை 3) மைதானம் 4) நூலகம்

11. இலங்கை நாட்டிற்குரிய நாணய அலகு எது?
   1) பைசா 2) சல்லி 3) ரூபாய் 4) யென்

12. சிகிரிய சித்திரங்களை நிர்மாணிப்பதற்கு காரணமான அரசன்
   1) பண்டுகாபயன் 2) தாதுசேனன் 3) காசியப்பன் 4) எல்லாளன்

13. A - 9 பாதையைக் குறிப்பது
   1) கண்டி - யாழ்ப்பாணம் 2) கொழும்பு - யாழ்ப்பாணம்.
   3) கொழும்பு - கண்டி 4) கண்டி - மத்தறை

14. 


படத்தின்படி B பகுதி குறிப்பது
   1) பெண்ணகம் 2) ஆணகம்
   3) குறி 4) புல்லி

15. துக்கத்தை பிரதிபலிக்கும் நிறம்
   1) வெள்ளை 2) கறுப்பு 3) சிவப்பு 4) பச்சை

16. 

உருவில் காட்டப்பட்டிருப்பவர்
   1) C.W.W.கன்னங்கரா 2) ஆனந்தசமரக்கோன்
   3) ஹென்றி ஒல்கோட் 4) அமரதேவா


17. வீட்டுத்தோட்டத்தில் இயற்கையாக வளர்ந்து பெருகக்கூடியது.
   1) துத்திரி 2) வல்லாரை 3) நொச்சி 4) எக்கேசியா

18. பின்வருவனவற்றுள் நீரில் வளராத தாவரம்
   1) அல்லி 2) குளவாழை 3) ஐதரில்லா 4) லில்லி

19. உப்பிட்டுக்கழுவக்கூடியது எது?
   1) மீன் 2) பழங்கள் 3) கீரைவகை 4) தானியம்

20. பின்வருவனவற்றில் புத்தளிப்புக்கருவி எது?
   1) சல்லாரி 2) ரபான் 3) வீணை 4) மேளம்

**09) பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை குறிப்பிடுக.**



1) .....................
2) .....................
3) .....................
4) .....................

# தீவிரவாதத்தை தூண்டும் சீமானை 10 ஆண்டுகள் சிறையிலிடவேண்டும்

## என்கிறார் நாராயணசாமி



சீமானை கைது செய்து 10 ஆண்டுகள் சிறையில் வைக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். புதுவையில் ராஜீவ் நினைவு ஜோதி யாத்திரை வழியனுப்பு விழா நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் நாராயணசாமி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் பேசியதாவது, புதுவை மக்கள் காங்கிரஸ் மீதும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீதும் மதிப்பும், மரியாதையும் வைத்துள்ளனர். ராஜீவ் காந்தி தான் பிரதமராக இருக்கையில் இந்தியாவை வல்லரசு நாடாக்கப் பாடுபட்டார். அவருடைய பதவிக் காலத்தில் புதிய கல்விக் கொள்கை, தொழில் மற்றும் அறிவியற் கொள்கைகள் கொண்டு வரப்பட்டன. தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதில் ராஜீவ் காந்தி முனைப்பாக இருந்தார். அவருடைய காலத்தில் அஸ்ஸாம், மிசோரம், பஞ்சாப் மாநிலங்களில் தீவிரவாதம் ஒடுக்கப்பட்டது. மேலும் இலங்கையில் தீவிரவாதத்தை ஒடுக்க அமைதிப் படையை அங்கு அனுப்பி வைத்தார். இது தவிர இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தார். அந்த உணவுப் பொருட்களை வாங்க இலங்கை இராணுவம் முன்வராதபோது அவற்றை விமானம் மூலம் தமிழர்களின் பகுதியில் போடச் செய்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் நாம் அவரை இழந்தோம். தீவிரவாதத்திற்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கும் ஒரு கூட்டம் தமிழகம் மற்றும் புதுவையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அண்மையில் திரைப்பட இயக்குனர் சீமான் கடலூரில் பொதுக்கூட்டம் நடாத்த அனுமதி கோரினார். தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் புகைப் படத்தை பிரசுரித்து கூட்டம் நடாத்த அவர் அனுமதி கோரினார். அந்தக் கூட்டத்திற்கு தமிழக அரசு தடை விதித்தது. அரசின் செயல் நியாயமானது.

சீமான் தன்னுடைய கூட்டத்தில் காஷ்மீர் தீவிரவாதி யாசின் மாலிக்கை அழைத்து வந்து பேச வைத்துள்ளார். தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதம் ஆகியவற்றைத் தூண்டிவிடுபவர்கள் தேசத் துரோகிகள். பல முறை சிறைக்குச் சென்ற சீமான் மீண்டும் சிறைக்குச் செல்ல விரும்புகிறார். தமிழக அரசின் வழக்குக்குப் பிறகு அவர் தலைமறைவாகிவிட்டார். அவரைக் கைது செய்து 10 ஆண்டுகள் சிறையில் வைக்க வேண்டும். நக்சலைட்டுகளின் தீவிரவாதத்தையும், அசாம் தீவிரவாதத்தையும் ஒடுக்கியுள்ளோம். எங்களைப் பொறுத்த வரை சீமான் போன்றோர் சுண்டைக் காய்கள். இந்தியாவில் இருந்து கொண்டு நம் நாட்டுக்கே எதிராக செயற்படுபவர்களை மக்கள் தூக்கி எறிய வேண்டும் என்றார்.


# சாதனை படைத்த இரட்டை சகோதரிகள்




இமயமலை மீதுள்ள நாட்டில்தான் உலகிலேயே மிக உயரமான 8848 மீற்றர் உயரமுடைய எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ளது. பனியால் மூடப்பட்டிருக்கும் இந்த சிகரத்தில் ஏறி சாதனை செய்வதற்கு ஏற்ற காலநிலை தற்போது நிலவுகிறது. இதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை 146 பேர் எவரெஸ்ட் மலையின் உச்சியை சென்றடைந்தனர். நேற்றுமுன்தினம் 94 பேர் அங்கு சென்றடைந்தனர். இதில் உத்தரகாண்டை சேர்ந்த 21 வயதை கடந்த தஷி மற்றும் நான்சி மாலிக் என்ற இரட்டை சகோதரிகள் இருவரும் நேற்றுமுன்தினம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி வரலாறு படைத்தனர்.

8000 மீற்றருக்கு மேலே மரண மண்டலப்பகுதிகள் இருந்தும் டெரா டூனை சேர்ந்த இந்த இரட்டை சகோதரிகள் தைரியமுடன் ஏறி சாதனை படைத்துள்ளனர் என்று நேபாள அரசு அறிவித்துள்ளது.

## இந்தியச் செய்திகள்



அரசு முறைப் பயணமாக, இந்தியா வந்துள்ள சீன பிரதமர் லீ கெகியாங் டில்லியில், நேற்றுமுன்தினம் பிரதமர், மன்மோகன் சிங்கை சந்தித்து பேசினார்.

# சூதாட்டக்கும்பலின் தலைவர் சரண்; முக்கிய புள்ளிகளுக்கு வலை வீச்சு

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. பொலிஸாரால் தேடப்பட்டு வந்தத் சென்னை சூதாட்டக் கும்பல் தலைவர் பிரசாந்த் நேற்றுமுன்தினம் சரணடைந்தார். சென்னை உள்ளிட்ட பல இடங்களில் ஐ.பி.எல். சூதாட்டம் நடைபெறுவதாக சி.பி.சி.ஐ.டி. பொலிஸாருக்கு கடந்த வியாழக்கிழமை இரகசியத் தகவல் கிடைத்தது. அந்தத் தகவலின் அடிப்படையில் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் சென்னையில் தீவிரமாக சோதனை நடாத்தி 6 பேரை கைது செய்தனர். ஆனால் சென்னையில் சூதாட்டக் கும்பலின் தலைவராக செயற்பட்ட அயனாவரம் மேடவாக்கம் டேங்க் சாலை பகுதிலயைச் சேர்ந்த பிரசாந்த் தலைமறைவாகி விட்டார். இதில் பிரசாந்த் கார் சென்னை விமான நிலையத்தில் நின்றதால், அவர் வெளிநாட்டுக்கு தப்பியோடி இருக்கலாம் என பொலிஸாரால் சந்தேகிக்கப்பட்டது.

இதனால் அவரை கைது செய்வதற்குரிய தீவிர நடவடிக்கைகளை பொலிஸார் முடுக்கி விட்டிருந்தனர். இந்நிலையில், பிரசாந்த் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நேற்று பிற்பகல் சரணடைந்தார். சரணடைந்த அவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



மேலும் பிரசாந்தை அழைத்துக் கொண்டு அவர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் சோதனை செய்தனர். இதில் சூதாட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கம்ப்யூட்டர், செல்போன்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இதேபோல உள்ளிட்ட 3 இடங்களில் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் சோதனை நடாத்தினர். இதனிடையே பிரசாந்த் கொடுத்த தகவலின் பேரில் சூதாட்டத்தில் முக்கிய புள்ளிகளாக செயற்பட்ட சஞ்சய், விஜயகுமார் ஆகிய 2 பேரை பொலிஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர்.

சூதாட்டக் கும்பலின் தலைவரான பிரசாந்த் சரணடைந்து இருப்பது இந்த வழக்கில் முக்கிய மைல்க்கல்லாக கருதப்படுகிறது. பிரசாந்த் கொடுக்கும் வாக்குமூலத்தின் அடிப்படையில் சென்னையில் ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்துவிடலாம் என்று சி.பி.சி.ஐ.டி. அதிகாரிகள் தெரிவிக்கின்றார். இதில் சென்னையில் உள்ள பல முக்கிய புள்ளிகள் சிக்குவார்கள் என சி.பி.சி.ஐ.டி. தரப்பில் கூறப்படுகிறது.



## வாழ்க வளமுடன்

பெயர் : ஜெ. அபிஷன்

முகவரி : சந்தை வீதி, கொடிகாமம்.

அகவை 1 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# நவீன ஹெலிகளின் உருவாக்கம்; ரஷ்யாவுடன் இணையும் இந்தியா



ரஷ்ய நிறுவனத்துடன் இணைந்து, பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனம் 23 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் ஹெலிகொப்டர்களைத் தயாரிக்க உள்ளது என, பெங்களூர் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவன மேலாண்மை இயக்குனர் சவுந்திரராஜன் கூறினார். இதுகுறித்து அவர் கூறியதாவது, ரஷ்ய நிறுவனம், பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனத்துடன் இணைந்து, ஹெலிகொப்டர்களைத் தயாரிக்கவுள்ளது. ஹெலிகொப்டர் தயாரிப்புப்பணிக்கு, இந் தியாவில் இருந்து 50 பொறியாளர்கள் ரஷ்யா செல்வுள்ளனர்.

பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட, வி.ஐ.பி.க்கள் பயன்படுத்தும் வகையில், சிறப்பு வசதிகள் கொண்ட ஹெலிகொப்டர்கள், தயாரிக்கப்படவுள்ளன.

சாதாரண ஹெலிகொப்டர்கள், 10 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் நிலையில், இந்த சிறப்பு வாய்ந்த ஹெலிகொப்டர்கள், 23 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் வகையில் அமையவுள்ளன. மேலும், உயரமான மலைகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு, தளபாடங்களை எடுத்து செல்லும் வகையிலும் அமைக்கப்படவுள்ளன. எதிரி நாட்டுப் படைகளை தாக்கி அழிக்கக் கூடிய விமானங்கள், வேவு பார்க்கும் ஆளில்லா விமானங்கள தயாரிக்கும் பணிகளும், நடந்து வருகின்றன.

# குதிக்கிறார் பிரியங்கா

மக்களவைத் தேர்தலில் உத்தரபிரதேச மாநிலம், சோனியா காந்தியின் மகள் பிரியங்கா வதேரா போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திரா காந்தி பிரதிநிதித்துவம் செய்தரே பரேலி தொகுதி அவரது குடும்பத்தின் விருப்பத் தொகுதியாக விளங்குகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உத்தர பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் அங்கு காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று . புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இரு பிரிவினரிடையே தொடர் வன்முறை
# குண்டுத்தாக்குதல்களில் 112 பேர் பலி



ஈராக்கில் பெரும்பான்மையாக வசிக்கும் சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கும் குறைவாக உள்ள ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கு இடையே சமய நம்பிக்கையில் வேறுபாடு காரணமாக மோதல்கள் நடந்து வருகின்றன. ஈராக்கை ஆட்சி நடத்தும் ஷியா முஸ்லிமான நவுரி மாலிகியின் ஆட்சிக்கு எதிராக சன்னி பிரிவு மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால், அரசுக்கும், சன்னி பிரிவு ஆயுதம் ஏந்தியவர்களுக்கும் இடையே சமீப காலமாக தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இதில் பலர் கொல்லப்பட்டு வ்ருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பாக்தாத், ஷாப், பஸ்ரா, பலாட் ஆகிய இடங்களில் சன்னி, ஷியா பிரிவு மக்கள் வசிக்கும் பகுதிகளில் இரு' பிரிவு போர்க்குணம் கொண்டவர்கள் நடத்திய கார்குண்டு தாக்குதல்களில் குறைந்தது 112 பேர் கொலலப்பட்டனர்.கடந்த புதன்கிழமை முதல் ஈராக்கில் சந்தைகள், பேருந்து நிறுத்தகங்கள் எனப் பல இடங்களில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 230ஐ தாண்டியுள்ளது. இதனால் அங்கு உள்நாட்டு போர் தொடங்கி விட்டது என்று கூறப்படுகிறது.

சிரியாவில் நடைபெற்று வரும் பிரிவினைவாத போரால் இங்கும் அது போன்று ஒரு நிலையை கொண்டு வர அல்கொய்தா ஆதரவுடன் செயற்படும் போர்க்குணம் கொண்டோரின் முயற்சிகள் தவிடுபொடியாக்கப்படும் என்று பிரதமர் நவுரி மாலிகி கூறியுள்ளார்.

## உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் சூறாவளி; 51 பேர் பலி



அமெரிக்க ஓக்லஹோமா மாகாண புறநகர் பகுதியை 200 மைல் வேகத்தில் வீசிய மிகப்பெரும் சூறாவளி நேற்று முன்தினம் தாக்கியது.சுமார் ஒரு கிலோ மீற்றர் அகலமுடைய இந்த சூறாவளிக்கு வீடுகள், பள்ளிகள் என பல இடங்கள் சூறையாடப்பட்டன. சில இடங்கள் தீப்பிடித்து எரிந்தன.

இந்த சூறாவளிக்கு பள்ளி குழந்தைகள் உள்பட 51 பேர் பலியாயினர். சூறாவளியால் தூக்கி வீசப்பட்ட பொருட்களுக்குள் சிக்கியிருந்த பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் மீட்கப்பட்டனர். இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட 120-க்கும் அதிகமான மக்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 70 பேர் குழந்தைகளாவர். இவர்களில் பலருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள 16 மாவட்டங்களுக்கு உடனடியாக அவசரநிலை உதவிகள் வழங்க உத்தரவிட்டுள்ளது.

# வெள்ளை மாளிகையில் மியன்மார் அதிபர்



மியன்மார் அதிபர் தெய்ன் சீன், அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு வருகை புரிந்துள்ளார். மியன்மாரில் இராணு ஆட்சி நடைபெற்றதால் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரை அந்நாட்டு அதிபருக்கு அமெரிக்காவில் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது. அங்கு ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதையடுத்து அந்த தடை நீக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மியன்மாருக்கு சென்றிருந்த அமெரிக்க அதிபர் ஒபாமா, மியான்மர் அதிபரை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்பை ஏற்ற தெய்ன் சீன், அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு சென்றார்.

மியன்மார் அதிபர் ஒருவர் வெள்ளை மாளிகைக்கு செல்வது 47 ஆண்டுகளுக்குப் பிறகு இதுவே முதல் முறையாகும்.அமெரிக்கா சென்றுள்ள தெய்ன் சீன், மியன்மாரில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு அங்குள்ள தொழிலபதிபர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

# கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க தேனீக்கள் குரோஷிய ஆராய்ச்சியாளர்கள் முயற்சி



நிலக்கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க, தேனீக்களுக்கு பயிற்சி அளிக்கும் முயற்சியில், குரோஷிய ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ஐரோப்பிய நாடான குரோஷியாவிற்கும், செர்பிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே, 1991இல் நடந்த போரின்போது, ஏறக்குறைய, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மேலும், கண்ணிவெடியில் சிக்கி, 2,500இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். இந்த சண்டையின்போது, 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் புதைத்து வைத்திருந்தது தெரியவந்தது. இந்தக் கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க, தேனீக்களை பயன்படுத்த, குரோஷிய ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

# ரஷ்யாவில் நிலநடுக்கம்




ரஷ்யாவை 6.0 அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் நேற்று தாக்கியது.அந்நாட்டின் தீபகற்ப பகுதியான காம்சட்காவில் இந்திய நேரப்படி நேற்றுக் காலை 6.55 மணியளவில் இது ஏற்பட்டது. இந்த தகவலை அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் பெட்ரோபவ்லோவ்ஸ்க் நகரத்தில் இருந்து 136 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருநதது.பூமிக்கடியில் 33 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள், சேதங்கள் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை.

# சீனப் பிரதமருக்கு எதிராக தீபெத் அமைப்புகள் போராட்டம்

(பீஜிங்)

சீனப் பிரதமர் லீ கெகியாங்கின் இந்திய சுற்றுப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரு நாள்களுக்கு தொடர் போராட்டங்களை நடத்த இருப்பதாக திபெத் அமைப்புகள் அறிவித்துள்ளன. இதையடுத்து டில்லியில் பொலிஸார் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். லீ கெகியாங் தங்கியுள்ள ஹோட்டல், சீன தூதரகத்தில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. டில்லி மெட்ரோ ரயில் நிலையம் அருகே திபெத்தியர்கள் போராட்டம் நடத்த வாய்ப்பு உள்ளதால், திங்கள் கிழமை காலை 8 முதல் 10 மணி வரை 4 மெட்ரோ ரயில் நிலையங்களும் மூடப்படுகின்றன. லீ கெகியாங், அவருடன் வநதுள்ள குழுவினரின் பயணத்திட்டங்களுக்கு ஏற்ப போக்குவரத்து மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

லீ கெகியாங் 3 நாள் பயணமாக ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் டில்லி வந்தார். திபெத்தை சீனா ஆக்கிரமித்து அடிமைப் படுத்தி வைத்திருப்பதாக குற்றம்சாட்டி அந்நாட்டு மக்கள் பல ஆண்டுகளாக சுதந்திரம் வேண்டி போராடி வருகின்றன.

# ஏவுகணை பரிசோதனை பான் கீ மூன் கண்டனம்



குறுகிய தூர இலக்கை குறி வைத்து தாக்கவல்ல ஏவுகணையை வட கொரியா நேற்று முன்தினம் வெற்றிகரமாக சோதித்துள்ளது. ஜப்பான் கடற்கரைப் பகுதியில் ஏவுகணைச் சோதனை தளத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஏவுகணைத் சோதனைக்கு தென் கொரியா தலைவர்களும் ஐ.நா பொதுச் செயலாளர பான் கி மூனும் கண்டனம் தெரிவித்துள்ளனர். கடந்த மூன்று நாட்களில், வடகொரியா நடத்தியுள்ள 6ஆவது ஏவுகணைச் சோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.நா.வினதும் அமெரிக்கா போன்ற நாடுகளின் எச்சரிக்கைகளையும் மீறி வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது.

# மேலாடை இன்றி பெண்கள்; நியூயோர்க்கில் அனுமதி




நியூயோர்க் நகரில் மேலாடை அணியாமல் நடமாடும் பெண்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் மேலாடை அணியாமல் சுற்றுப்பயணம் செய்து பரபரப்பை ஏற்படுத்திய ஹோல்லி வேன் வோஸ்ட், நியூயோர்க் நகரிலும் தனக்கே உரிய பாணியில் சுற்றி வந்த போது அவரை கைது செய்த பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர்.

பல மாதங்களாக நடைபெற்ற இந்த வழக்கில் நியூயோர்க் நீதிமன்றம், 'முந்தைய தீர்ப்பின் அடிப்படையில் மேலாடை இல்லாமல் பெண்கள் பொது இடங்களில் நடமாடுவதை குற்றம் என்று கூற முடியாது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன்' என்று சமீபத்தில் தீர்ப்பளித்தது. இதனையடுத்து, நியூயோர்க் நகரில் பணியாற்றும் 34,000 பொலிஸாருக்கு நகர பொலிஸ் தலைமையகம் நேற்று முன்தினம் அவசர உத்தரவை பிறப்பித்துள்ளது.

'பெண்கள் மேலாடை இன்றி திரிவது குற்றம் அல்ல. எனவே, இந்த குற்றப்பிரிவின் கீழ் யாரையும் கைது செய்ய வேண்டாம்' என அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# மும்பையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது சென்னை அணி



ஐ.பி.எல். கிரிக்கெட்டின் பிளே ஒப் சுற்றின் முதல ஆட்டம் டில்லியில் நேற்றிரவு 8 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து

சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மைக்கல் ஹசி மற்றும் விஜய் களமிறங்கினர். இருவரும் தொடக்கத்தில் நிதானமாக விளையாடினர். இவர்களது இணைப்பாட்டத்தில் சென்னை 52 ஓட்டங்களை எடுத்தது. விஜய் 23 ஓட்டங்கள் எடுத்த போது, பொல்லார்ட் வீசிய பந்தில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ரெய்னா, ஹசியுடன் இணைந்து விளையாடினர். இருவரும் மும்பை அணியின் பத்து வீச்சை துவம்சம் செய்தனர். ரெய்னா 42 பந்தில் 82 (5 பவுண்டரி, 5 சிக்சர்) ஓட்டங்களும், ஹசி 58 பந்தில் 86 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இறதிவரை விளையாடினர்.

இதனால் சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 192 ஓட்டங்களைக் குவித்தது. அணியில் அதிகபட்சமாக ஹசி 86 ஓட்டங்கள் எடுத்தார். 193 என்ற கடினமான வெற்றி இலக்குடன் மும்பை அணி விளையாடியது.

தொடக்க வீரர்களாக ஸ்மித் மற்றும் தரெ களமிறங்கினர். தரெ 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த தினேஷ் கார்த்திக் ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். அதிரடியாக விளையாடிய ஸ்மித் 28 பந்துகளில் 68 (6 பவுண்டரி மற்றும் 5 சிக்சர் கள்) ஓட்டங்கள் எடுத்து, ஜடேஜா வீசிய பந்தில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார.

கார்த்திக்கும் 11 ஓட்டங்களுடன் வெளியேற, அடுத்து வந்த சர்மாவும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார்.

4 முக்கிய வீரர்களின் விக்கெட்டுக்களை இழந்து மும்பை அணி திணறியது.

நிலைத்து விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட பொல்லார்ட்டும் 24 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆனார். பின்னர் கடைசி வரிசை வீரர்களும் சென்னை அணியின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆனார்கள்.

இறுதியில் மும்பை அணி 144 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து படுதோல்வியைத் தழுவியது. இதனால் சென்னை அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு முன்னேறியது.

---

## முஸ்லிம்கள்...

தெரிவித்துள்ளது. 2012 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சர்வதேச மதச் சுதந்திர அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க தூதரகம் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தி தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் அந்த அறிக்கை மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன ரீதியான முரண்பாடுகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மத நம்பிக்கை இன சமூக அடிப்படையில் சமூக ரீதியான ஒடுக்குமுறைகள் இடம்பெறு வதாகவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யும்போது குறைவாகக் காணப்பட்டாலும், பௌத்த கடும்போக்காளர்கள், முஸ்லிம்கள் மீது அதிகளவு அழுத்தங்களை பிரயோகித்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## இந்திய...

எனினும் இலங்கையில் அனைவருக்கும் சம உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்திய அரசு தொடர்ந்து முயற்சி செய்யும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்தார். இலங்கையில் தமிழர்கள் உட்பட சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்குரிய சமத்துவமிக்க தீர்வொன்றினைப் பெற்றுத்தர இந்தியா தொடர்ந்தும் தனது முயற்சிகளை எடுக்கும் என்றும் அவர் உறுதியளித்ததார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரான அசோக் கே.காந்தா, இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்கு ஆசிய பிரிவுக்கான செயலாளரா்க நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் மிக விரைவில் இலங்கையிலிருந்து செல்லவுள்ளார். இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அசோக் கே காந்தாவுக்கு விசேட விருந்துபசாரமொன்றை வழங்கினர். அத்துடன், இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் த.தே.கூ.பின் நாடாளுமன்றக் குழுத தலைவர் இரா. சம்பந்தன் உட்பட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இதன்போது, உரையாற்றிய த.தே.கூ.பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கையின் பழங்குடிகளான தமிழ் மக்களுக்கும் சுய உரிமைகள் உண்டு. அதனால், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமைகள் என்ற அடிப்படையில் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அசோக் கே காந்தாவிடம் கேட்டுக்கொண்டார் என்று மாவை எம்.பி. கூறினார்.

அத்துடன், இலங்கையின் உயர்ஸ்தானிகராக அசோக் கே காந்தா செயற்பட்ட காலத்தில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் இந்தியாவினால் முடியவில்லை என்றும் சுட்டிக்காட்டிய சம்பந்தன், இனிவரும் காலத்திலேனும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியா முழுமூச்சாக செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாக மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதில் இந்தியா தோல்வி கண்டுள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களும் சமத்துவமாக வாழ்வதற்குரிய தீர்வினை இந்தியா பெற்றுக்கொடுக்க தொடர்ந்து தனது முயற்சிகளை மேற்கொள்வேன் எனவும் அசோக் கே காந்தா உறுதியளித்ததாக மாவை எம்.பி மேலும் கூறினார்.

---

## தொழிற்சங்கப்...

செயற்பட்டுக்கொண்டிருந்தன. பாடசாலைகள் வழமைபோல் இயங்கின. வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது என்பதற்கான அடையாளத்தையே கொழும்பில் காணமுடியவில்லை எனக் கூறப்படுகிறது. கொழும்பில் தனியார் வாத்தக நிலையங்கள் கூட, அதாவது கோட்டை, புறக்கோட்டை கடைகள் எல்லாம் இயங்கியது. வெளிமாவட்டங்களிலும் சகலதும் இயங்கியதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அச்சுறுத்தி அரச ஊழியர்களை வேலைக்கு வரவைத்தது என்று கூறப்பட்டாலும் தனியார் நிறுவனங்கள், கடைகளுக்கு என்ன நடந்தது. ஒன்றுகூட மூடப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தவிரவும் கொழும்பில நேற்று வழமைக்கு மாறாக போக்குவரத்து நெரிசலும் அதிகரித்து இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. போராட்டம் உண்மையில் நடநதிருந்தால் கொழும்பில் வீதிகளில் வாகன நெரிசல் வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதேவேளை மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக நேற்று நடத்தப்பட்ட வேலை நிறுத்தப்போராட்டம் வெற்றியளித்துள்ளது. இந்த வேலைநிறுத்தம் தொடர்பில் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நேற்று வரை அரசாங்கத்திற்கு பாரியதொரு நெருக்கடி கொடுக்கப்பட்டுள்ளது என தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் இணைப்பாளர் கே.டீ.லால் காந்த தெரிவித்தார்.

எவ்வாறாயினும், எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதால் வெசாக் வாரத்தின் இறுதியில் இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். பொரளை, நுகேகொடை, மொரட்டுவை, கண்டி, தம்புத்தேகம மற்றும் நாரஹேன பிட்டி போன்ற பிரதேசங்களிலுள்ள தபாலகங்களில் ஊழியர்களின் வருகை குறைவாகவே காணப்பட்டது. ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்திய சாலை ஊழியர்களின் வருகையும் மந்த நிலையிலேயே காணப்பட்டது. அத்துடன் அந்த வைத்தியசாலையின் அதிகாரிகளும் நேற்று காலை 10 மணிவரை பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## 13 ஆவது திருத்த...

இருப்பதாக சம்பிக்க கூறியுள்ளார். அது மிகவும் அபாயகரமான விடயம் என அவர் தெரிவித்துள்ளார். சட்டமூலத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபை பயன்படுத்தினால் அது பெரும்பான்மை மக்களுக்கு அநியாயத்தையும் நாட்டின் நிர்வாகத்திற்கு அபாயத்தையும் ஏற்படுத்தும் என அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

---

## அகற்ற முடியாது...

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் தெரிவித்துள்ளனர். மாகாணசபை முறைமையை ஒழிப்பதற்கு ஆளும் கட்சியில் உள்ள பெரும்பாலானவர்கள் எதிர்பபாகவே உள்ளனர். இந்த நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கான பிரேரணையை கொண்டுவந்தாலும் அதனை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அப்பிரேரணையானது மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவின்றித் தோல்வியுடையும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

---

## யாழ்ப்பாணத்திலும்...

ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்தகைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே அவர் முன இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தெரியவருகினறது. யாழ். பல்கலைக்கழக வாசலின் முன்பாக ஒன்றுகூடிய ஆர்பபாட்டக்காரர்கள் வாழ்க்கைச் செலவை அதிகரிக்காதே, மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாதே, மக்களின் வயிற்றில் அடிக காதே, இதுதான் ஆசியாவின் அதிசயம், மின்கட்டண உயர்வு மாணவர்கள் இருளில், போன்ற சுலோகங்களைக கையில் ஏந்தியவாறு இந்த அமைதிவழி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த யாழ். பல்கலைக் கழக ஆசிரயர் சங்கத் தலைவர் ஏ.ராஜகுமாரன் கருதத்துத் தெரிவிக்கையில்,

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆகிய நாங்கள் தொழிற சங்கம் என்ற ரீதியில் நேற்று. எமது விரிவுரைகளைப் புறக்கணித்து காலை 10.00 மணி முதல் 11.00 மணிவரை மின்கட்டண உயர்விற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தை நடாத்தி முடித்துள்ளோம்.

நாங்கள் எங்களது பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட விடயங்களில் மட்டுமல்ல நாட்டில் எந்த மக்களாவது அடக்கி ஒடுக்கப்படும் போது அதற்கு எதிராக குரல்கொடுக்கவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது. இந்த நிலையில் சாதாரண மக்கள் மிகவும் அடக்கப்பட்டிருக்கும் நிலைமை காணப்படுவதனால் எங்களது இநதப் போராட்டம் நியாயமானது என்பதைக் கருத்தில் கொண்டு அதில் ஈடுபட்டுள்ளோம். நாங்கள் எதிர்வரும் காலங்களிலும் இப்படியாக மக்கள் மீது நெருக்குதல் கொடுக்கப்படும் காலங்க ளில் எங்களது குரல்களை அதற்கு எதிராகக் கொடுப்போம் எனறும் தெரிவித்தார். (பா)

---

## முன்னாள்...

சதீஷ்குமார் தெரிவித்துள்ளார். இந்த முகாமில் புனர்வாழ்வு பெற்றுவந்த 100 முன்னாள் போராளிகளும் பூந்தோட்டம், சேனதுறை மற்றும் கந்தகாடு ஆகிய புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் தற்போது மூன்று புனர்வாழ்வு முகாம்களே இயங்கி வருகின்றன.

பூந்தோட்டம் முகாமில் 122 பேரும், சேனதுறை முகாமில் 119 பேரும், கந்தகாடு முகாமில் 99 பேரும் என மொத்தமாக 340 முன்னாள் போராளிகள் தொடர்ந்து புனர்வாழ்வு பெற்று வருவதாக அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் கூறியுள்ளார். ஏற்கனவே 24 முகாம்கள் இயங்கிவந்ததுடன், இதுவரை 12 ஆயிரத்துக்கும் அதிகமான முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பள்ளிச் சிறுமி மீது வன்புணர்வு; கண்டித்து தொடர் போராட்டம்



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்களை கண்டித்து வவுனியாவில் நேற்றும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெற்றது.

வவுனியா, கண்டி வீதி பௌத்த விகாரைக்கு முன்பாகவிருந்து ஆரம்பித்த இப்பேரணியானது வவுனியா மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு கையளிப்பதற்கான மகஜரொன்றை அரசசார்பற்ற பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சரஸ்வதி மோகநாதனிடம் ஒப்படைத்ததுடன், வவுனியா மாவட்டத்திலுள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திற்கும் மகஜரொன்றை கையளித்தனர்.

குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், இளைய சமூகத்தை பாதுகாப்போம், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும், கிராமத்து சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லையா?, பாடசாலை சீருடைக்கு மரியாதை இவ்வளவா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்ததுடன், கோ'ங்களையும் எழுப்பினர்.

மேலும், நெடுங்கேணியில் 7 வயதுச் சிறுமியொருவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளியை கைதுசெய்யுமாறும் இவர்கள் கோஷம் எழுப்பினர்.

சர்வோதயம் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் எஸ்.துஸ்யந்தன், பல அரசசார்பற்ற நிறுவனங்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கிளிநொச்சி நகரத்தில் புகையிரத நிலையத்திற்கும் டிப்போச் சந்திக்குமிடையிலான புகையிரதப் பாதை புனரமைக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இருந்ததை விட அகலமாக்கப்பட்டு இவ்விடத்தில் பணிகள் இடம்பெற்று வருகிறது. (21)

## இலங்கைக்கு உதவுபவர்கள் யார்? இந்தியாவுக்கு 2 ஆம் இடம்

இலங்கைக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்கும் நாடுகளில், இந்தியாவுக்கு இரண்டாம் இடம் கிடைத்துள்ளது. இந்தியாவின் எகனோமிக்ஸ் டைம்ஸ் செய்தித்தாள் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா கடந்த வருடம் இலங்கைக்கு 700 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியுதவிகளை வழங்கியுள்ளது. இதனிடையே, இலங்கைக்கு அதிக நிதியுதவிகளை செய்யும் நாடாக சீனா காணப்படுகிறது. சீனா கடந்த வருடம் இலங்கையின் அபிவிருத்திக்காக 1.05 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## களவு போன நகைகள் மீளவும் கைக்கு திரும்பியது

(துணுக்காய்)

துணுக்காய் தேறாங்கண்டல் பகுதியில் களவாடப்பட்ட மூன்றரைப் பவுண் நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த வரதராசா லீலாவதி என்ற குடும்பத்தினர் கடந்த வாரம் மரணவீடு ஒன்றுக்கு சென்றிருந்தனர். அவ்வேளை வீட்டினுள் புகுந்த திருடன் அந்த நகைகளைக் களவாடியுள்ளான்.

இது தொடர்பாக நகை உரிமையாளர்கள் மல்லாவி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர். இதனடிப்படையில் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவரை கைதுசெய்து விசாரணை நடத்தினர்.

விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை சந்தேக நபரின் தாயார் குறிப்பிட்ட நகைகளுடன் வந்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். (ர)

## இரத்ததான நிகழ்வு

(மன்னார்)

இந்த வருடத்திற்கான உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இரத்தான நிகழ்வு இன்று மன்னாரில் இடம்பெறவுள்ளது.

முருங்கன் பிரதேச வைத்திய சாலையில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. உலக செஞ்சிலுவை தினமான மே மதம் 8 ஆம் திகதி ஒவ்வொரு வருடமும் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இந்த முறை இரத்ததான நிகழ்வு மன்னாரில் இடமபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சகல தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இளைஞர் நாடாளுமன்றம் ஜனாதிபதி தலைமையில்

நாட்டின் இரண்டாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் நாளை மஹரகம தேசிய இளைஞர்கள் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறுமென இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்ற தேர்தலில் 547 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களுள் 138 பேர் போட்டி இன்றியே தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளை இந்த இளைஞர் நாடாளுமன்றத்திற்கு இம்முறை பெண் அபேட்சகர்கள் 44 பேர் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். அவ்வாறே முஸ்லிம் வேட்பாளர்கள் 26பேரும் தமிழ் வேட்பாளர்கள் 48 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாடுக்கு நம்நாட்டு இளைஞர் நாடாளுமன்றத்தினாலும் பெரும் பங்காற்ற முடியும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

## 'வல்லப்பட்டை' கடத்திய அறுவர் கைது

(கொழும்பு)

உலகிலேயே பெறுமதியான வாசனைத் திரவியங்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் வல்லப்பட்டையுடன் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொலன்னாவை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே விசேட அதிரடிப்படையினர் இவற்றை கைப்பற்றியுள்ளனர்.

13,489 கிலோகிராம் வல்லபட்டையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இதன் பெறுமதி 20 கோடி ரூபா என்றும் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் இருவர் இந்திய பிரஜைகள் என்றும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்தே நேற்றிரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இவர்கள் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வளவு பெறுமதியான வல்லப்பட்டை நாட்டிற்குள் மீட்கப்பட்டமை இதுவே முதல்தடவையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு - பதுளை ரயில் தண்டவாளத்திலிருந்து சுமார் 60 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பெண்ணின் தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டுள்ளதாகவும் வெள்ளை நிற சட்டையும் பாவாடையும் அணிந்திருப்பதாகவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

## புலிகளின் ஆதரவாளர் இந்தியாவில் கைது

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டாளராக இருந்ததாகக் கூறப்படும் 35 வயதுடைய இலங்கையர் ஒருவரை இந்திய குற்றப்பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர் நைரோபிக்கு பயணமாகவிருந்த வேளையிலேயே மும்பாய் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த மின் பொறியியலாளரான இவர், இலங்கையிலிருந்து படகு மூலம் தமிழ்நாட்டின் வேதாரணியம் கரையை மே மாதம் '9 ஆம் திகதி அடைந்தார். இலங்கை அரசாங்கம் இவருக்கு எதிராக இன்ரபோல் அறிவித்தல் விடுவித்திருந்தமையால் இவர் மும்பாய் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

இவர் இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒழிக்கப்பட்டபின் மறைந்து வாழ்ந்து வந்தார். இவரை இலங்கை அதிகாரிகள் 2009 ஆம் ஆண்டு கைது செய்து சித்திரைவதை செய்துவந்தனர். இலங்கை பொலிஸார் இவரைத் தேடி வந்தனர். இதனால் இவர் படகு மூலம் தமிழ்நாட்டுக்கு வந்தார் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர் 2001 - 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய கல்லூரி ஒன்றில் படித்து மின் பொறியியலில் பட்டம் பெற்றவர். இவரை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஆணையாளர் கூறியுள்ளார்.




## யுவதி மீது பலாத்காரம் கனகராயன்குளத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா கனகராயன்குளத்தில் மாற்றுத் திறனாளியான 18 வயது யுவதியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜெ.ஜெயக்கெனடி இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கனகராயன்குளம் வடக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கிராமத்தில் குறித்த யுவதி வீட்டில் தனியாக இருந்தவேளை, இளைஞனொருவர் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த யுவதியின் குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், பாதிக்கப்பட்ட யுவதி வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜெ.ஜெயக்கெனடி தெரிவித்தார்.

இதேவேளை நெடுங்கேணி சேனப்பிலவு கிராமத்தில் இடம்பெற்ற 7 வயதுடைய சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவரை கைது செய்துள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தனக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.